உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

## தெல்லிப்பழை, இலங்கை



# மகா கும்பாபிஷேக மலர்

துர்மதி ஆண்டு சித்திரைத் திங்கள் 5ஆம் நாள்

17-4-1981

(மண்டலாபிஷேகப் பூர்த்தி வெளியீடு)

ஸ்ரீ. [illegible]
1988.09.14



உற்சவமூர்த்தி

# இன்னருள் சுரக்கும் இறைவனின்
# அருள்வடிவே சக்தி

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் வாழ்த்து

ஈழநன்னாடு பண்டைக்காலந்தொட்டே ஆத்மீக நெறியினையும், அருந் தமிழையும் போற்றி வந்திருக்கிறது. வைதிகம் தொடர்பான விழாக்கள், சடங்குகள், முறைகள் ஆகியவற்றை விடாது இன்றும் செயல்படுத்தி வருகிறது.

அவ்வரிசையில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவிக்குக் குடமுழுக்கு விழா எடுப்பது சிறப்புடையதொன்றாகும்.

தன்னைச்சாரும் மன்னுயிர்களுக்கு இன்னருள் சுரக்கும் இறைவனின் அருள் வடிவே சக்தியின் (அம்மை) திருவுருவம். மெய்கண்ட சாத்திரங்கள் 'அருளது சத்தியாகும் அரன்றனக்கு' என்று பேசும்; நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் சிந்திக்கின்ற அன்பர்க்கு நுகர்வுகளை விளைவிப்பதோடு மும்மைக்கும் நலம்பயக்கும் பேரின்பத்தையும் நல்க வல்லவளாகிய அன்னை கோயில்கொண்டருளும் திருக்கோயிலில் புதிதாக இராஜகோபுரம் அமைத்தும் மூலமூர்த்தம், பரிவார தேவதைகளின் திருவுருவங்களைப் புதுக்கியும் எடுக்கும் விழாச் சிறக்கவும், இறைபணியையே என்றும் அறப்பணியாகக் கருதி உள்ளார்ந்த உவகையுடன் அரிய தொண்டுகளைச் செய்து வரும் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உள்ளிட்ட அனைத்து ஆத்திக அன்பர்களும் நலன்கள் பல பெற்று அருட்பணியில் தோயவும் செந்திற கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
(அதிபர், காசிமடம்)

திருக்கைலாய பரம்பரைத் தருமையாதீனம்
26ஆவது குரு மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வழங்கிய

# வாழ்த்துரை


தமிழ்நாட்டில் எழுபத்தைந்து ஆண்டுகளாகச் சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம் ஆற்றிவரும் சைவத் தமிழ்ப் பணிகளை அனைவரும் அறிவர். பன்னிரு திருமுறைகள், பதினான்கு சாத்திரங்கள், சங்க இலக்கியங்கள் முதலிய நூல்களைச் சிறந்தமுறையில் ஆராய்ந்து அரும்பொருள் அகராதியுடன் அடக்கவிலையில் வெளியிட்ட பெருமை சமாஜத்திற்குரியது. நல்ல முறையில் உருவாகி வளர்ந்த சமாசத்தின் எழுபத்தைந்து ஆண்டு வளர்ச்சியை அறிவிக்கும் பவள விழா இலங்கை—தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் நிகழ்வது மகிழ்ச்சிக்குரியது.

சைவர், சைவ இளைஞர், சைவ மங்கையர் மாநாடுகளாக மூன்று நாட்கள் நிகழும் சமாசப் பெருவிழா நிகழ்ச்சியில் சைவச் செந்தமிழ் அறிஞர்கள் பலர் பங்குகொண்டு உரையாற்றுவது மிக்க பயனளிப்பதாகும். சைவ சமயத்திலும் செந்தமிழ் மொழியிலும் மிக்க ஆர்வமும் தோய்வும் ஈடுபாடும் கொண்ட இலங்கை அன்பர்கள் இந்நிகழ்ச்சிகளைப் போற்றிக் கொண்டாடுவர். மாநாடு சிறப்புற நிகழவும், சமாஜம் மென்மேலும் சிறந்து விளங்கிப் பல அரிய நூல்களை வெளியிட்டு விழாக்கள் கொண்டாடவும், மாநாட்டில் பங்கு பெறும் அன்பர்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்றுச் சிறக்கவும் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்




இராஜகோபுரம், உட்கோயில் புனருத்தாரண அமைப்பு யாவையும் இயற்றிய தலைமை ஸ்தபதி தமிழ்நாடு திரு. எஸ். தேவலிங்கம் அவர்கள்



கர்மாரம்பம்



அலங்கார நுழைவாயிலும் இராஜகோபுரமும்
கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கும் காட்சி



விநாயகர் குடமுழுக்கு நடாத்திய சிவாசாரியாருக்குக்
காப்புக் கட்டும் வைபவம்

### சென்னை ஸ்ரீ கிரிதாஸ்கிரி அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

அகில உலகங்களையும் ஆக்கிக் காத்து மீண்டும் தன்னுள்ளே அடக்கிக் கொள்ளும் பூரணமான பேரறிவான ப்ரம்மம் ஒன்ருக இருப்பினும் செயல் நிமித்தம் அது தன்னை இரண்டாகக் கூறுபோட்டுக் கொள்கிறது. அக் கூறுபாடுகளைத்தான் சக்தி சிவம் என்று அறிகிருேம். உலகம் அனைத்திலும் எக்காரியம் நடக்க வேண்டினும் சக்தி அவசியம் தேவைப்படுகிறது.

வேதகாலம் தொட்டு பறை சாற்றப்படுகின்ற தத்துவங்களிலே முக்கிய மாக இக்கலியுகத்திற்கு மூன்று மூர்த்திகளையே சிறப்புடைய வழிபாடுகளுக்கு உரித்தானவையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. கலியுகத்தில் முதற்கண் குரு வழிபாடு, இரண்டாவதாக கணபதி, மூன்ருவதாக சண்டி (துர்க்கை) இந்த மூன்று மூர்த்திகளுமே கலியுக மாந்தர்கள் வழிபடவேண்டிய மூர்த்திகளாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

அப்பேர்ப்பட்ட ஆதிபராசக்தி துர்க்கை திருவுருவம் தாங்கி சகல புவனங்களையும் ஆட்சி புரிந்து வருகின்ருள்.

தெல்லிப்பழையிலே தேன்மதுரத் தமிழிலே தெளிவாகத் தெளியும்படிக்கு அள்ளி அள்ளி அழகாகப் பேசும் திறன் பெற்ற திருநிறைச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைத் தலைவராகக் கொண்டு மற்றும் நிர் வாகஸ்தவர்கள் ஈழத்துப் பெரும் பக்தர்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு அன்னையாம் துர்க்காதேவிக்கு ஆலயத் திருப்பணி செய்து உலகத்து மக்க ளெல்லாம் ஒன்றுபட்டு வாழத் திருவுளம் கொண்டு அன்னையின் ஆலயத்திலே கும்பாபிஷேகத் திருவிழா ஸ்ரீகுருவருளும் திருவருளும் பெற்று நடத்த முற்பட்டிருப்பது பெரும் மகிழ்ச்சிக்குரியது.

இது என்றென்றும் நினைவில் நிறுத்திக்கொள்ளவேண்டிய அமைப் பாகும். எல்லாம் வல்ல சற்குருநாதன் ஸ்ரீ ஞானனந்தகிரி சுவாமிகளின் பரி பூரண அனுக்கிரகம் இவ்விழா சம்பந்தப்பட்ட அனைவர்க்கும் மற்றும் உலகத்து மக்கள் யாவர்க்கும் கிடைக்கப்பெற்று இன்புற்று இருக்கவேண்டி பன்முறை சற்குருநாதனின் திருவடிகளை நினைந்து ஆசி கூறி அமைகின்றேன்.


**ஸ்ரீ ஹரிதாஸ் கிரி**

யாழ்ப்பாணம்
நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் சுவாமிகள்


தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகா கும்பாபிஷேகத்தை யொட்டி நிர்வாக சபை அன்பர்கள் ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதறிந்து பெருமகிழ்ச்சியடைகிறோம். சமய உணர்வு படைத்தோர் அனைவரும் தாங்கள் சைவ உலகுக்குப் புரிந்துவரும் பெருந் தொண்டினை நன்கறிவர்.

அம்பாளின் அளப்பரிய கருணையினால் இராஜகோபுரம் நிறுவுதற்கும் கும்பாபிஷேகம் நிறைவுறவும் தம்மாலான பொருளுதவி, சரீரஉதவி, மற்றும் வேண்டிய வகைகளில் ஒத்துழைத்தோர் அனைவரும், இன்னும் தொடர்ந்து தொண்டு புரிவோர் எல்லோரும் மரணமிலாப் பெருவாழ் வெய்துவார். நாமும் எல்லாம் வல்ல பராசக்தியை மனமாரப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கிறோம்.

**ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்**



மகா கும்பாபிஷேகக் கிரியைகளை நடாத்திய பிரதான சிவாசாரியர்கள்



தமிழகத்திலிருந்து வருகை தந்த
வேதவிற்பன்னர்களும், திருமுறை ஓதுவாரும்

# பக்திபூர்வமாக வழிபட்டால்
# இலங்கை புண்ணிய புரமாகும்

**மகாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் அவர்கள்**

(மாவை ஆதீனகர்த்தா)

சகல ஐஸ்வரியங்களையும் தரவல்லதும், முறையானதும், தொடர்ச்சியானதுமானது துர்க்கா வழிபாடு. ஜகத்தை நல்வழிப்படுத்த முடியுமான மகாசக்தி துர்க்கா வழிபாட்டால் இயலுமென வியாசர் பஞ்சபாண்டவர்களுக்கு எடுத்துரைத்துள்ளார். பிணி, வறுமை, மயக்கம், பகை ஆகியவற்றை நொடிப்பொழுதிலே நீக்கும் சக்தி வாய்ந்தது துர்க்காவார வழிபாடு. இப்படியிப்படியே ஜீவர்களுக்கு வேண்டப்படும் இஷ்காம்யங்களைத் தரவல்லது ஒழுங்கான துர்க்கா ஆராதனையாகும்.

துர்க்கா ஆராதனைக்குத் தேவியின் பிரீதிக்காக சுவாஸினீ (சுமங்கலி) பூசை, குமாரி பூசை, 'வடுக பூசை' முறையாகச் செய்யப்படல் வேண்டும். இரண்டு வயது முதல் பத்து வயது வரையுள்ள குமாரிகளுக்கு முறையே குமாரீ, திருமூர்த்தி, கல்யாணீ, ரோகிணீ, காளி, சண்டிகா, சாம்பவீ, துர்க்கா, சுபத்ரா என்றபடி வரிசைப்படுத்தி சகல காரிய சித்தியின் பொருட்டு பிராமணகுல குமாரிகளையும், ஜெயத்தின் பொருட்டு க்ஷத்திரிய குமாரிகளையும், க்ஷேமலாபங்களுக்காக வைசிய குமாரிகளையும், அபிவிருத்திகளுக்காக சூத்ர குமாரிகளையும் முறையாகப் பூசிப்பது மேலானதாகுமென நூல்கள் கூறுகின்றன.

இராஜவஸ்யம், கஷ்டநிவர்த்தி, மஹாபய நிவர்த்தி, பிணி, பகை, அச்சம் நிவர்த்தி, மற்றும் சகல சௌபாக்கியப் பேறடைய, நாடு நலம்பெற, உலக க்ஷேமம் உண்டாக துர்க்கா சப்தசதி மந்திர ஆராதனை உறுதுணை தருகிறது.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம் மேற்கூறியவற்றை நடப்பிக்கச் சகல வசதிகளையும் பெறுபேறுகளையும் பெற்றிருப்பது ஈண்டு கவனிக்கற்பாலது. ஆலய அமைப்பு, பிரகாரவரிசை, ஆலய வரலாற்றின் தொன்மை, உபாசனைக்கிரமம், மந்திர ஸ்தோத்திரப் பெருக்கம், உற்சவ மகத்துவம் ஆதியன சிறப்பம்சமாக இருக்கின்றன. பக்தர்கள் மிகுந்த பக்தி பூர்வமாக துர்க்காதேவி ஆராதனைகளை நடாத்துவார்களாயின், அமைதியான புண்ய புரமாக மாறும். காமதேனுவைப் போன்று யாவற்றையும் தரவல்ல துர்க்கா தேவியை வழிபட்டு, அருளுக்குப் பாத்திரமாகுதல் மனிதப் பிறவி எடுத்ததின் பயனாகும். இந்த சீரிய கும்பாபிஷேகத்தோடு இதற்காக நாமனைவரும் சங்கற்பிப்போமாக.

பிரதிஷ்டா சிரோமணி, கிரியாகிரமஜோதி

வண். வெங்கடேச வரதராஜப்பெருமாள் அட்டகிரி கந்தசுவாமிகோவில் பிரதமகுரு

**சாமி விஸ்வநாதக்குருக்கள் அவர்கள்**

வழங்கிய

# ஆசியுரை

அகில புவனங்களுக்கும் ஆதிசக்தியாக விளங்கிய அன்னை பராசக்தியின் அருட்பெருங் கருணை வடிவினளாக அம்பிகை பல ரூபங்களாக அமைந்த உலகத்தில் வாழும் சகல ஆன்மாக்களையும் காத்தருளும் வீரிய சக்தியே ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி. மேற்படி துர்க்காதேவி விஷ்ணுவின் அம்சம் பொருந்திய வடிவினளாக சகல ஆன்மாக்களிடத்திலும் கருணை பூண்டு, வீரம், ஜயம், ஞானம், தனப்பிராப்தி, கல்வியாதிய போகங்களைத் தம்வயம் கொண்ட கருணை வடிவினளாகிய ஸ்ரீ துர்க்காதேவிக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகத்தை நடத்தவும் தென்னுட்டிலிருந்து வருகை தந்த சகல சிற்பக் கலைகளையும் கற்றுணர்ந்த சிற்ப கலாநிதியாகிய ஸ்தபதி அவர்களின் கைவண்ணம் பொலிவுறும் அழகிய இராஜகோபுரத்திற்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறவும் திருவருள் பாலித்துள்ளது. ஆகவே 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்ற வாக்கிற்கு அமைய கோபுர கும்பாபிஷேகத்தைக் காணும் பலன் எமக்கு இன்றியமையாதது. மெய்யுணர்விற் சிறந்த அடியார்கள், திருமூலர் திருமந்திரத்தில் ஆன்மாவே சிவம், உள்ளமே திருக்கோயில், திருமேனியே கோபுரம் எனச் சிறப்பாகக் கூறுகிறுர். இத்தகைய பெரும் தன்மை வாய்ந்த பெரும் சாந்தி விழாவாகிய மகாகும்பாபிஷேகத்தைத் தரிசித்தும் பண உதவி செய்தும் ஆதரவுநல்கிய அடியார்கட்கு ஸ்ரீ துர்க்காதேவியின் திருவருள் என்றும் குறைவில்லாது கிடைக்கவேண்டும் என அம்பிகை திருப்பாத மலர்களை நினைந்து பிரார்த்தனை செய்து ஆசி கூறுகிறேன்.

**சாமி விஸ்வநாதக்குருக்கள்**

இலக்கிய கலாநிதி

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**

வழங்கிய

# வாழ்த்துரை

ஒரு கனு

ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் உள்ள சிவாசாரியார்களைக் கொண்டதொரு வேதாகம சங்கம்,

நித்திய நைமித்தியங்கள், பிரதிட்டை, வழிபாடுகள் என்றிவைகளுக்கும், மலரெடுத்தல் முதலிய செயற்பாடுகள் ஒன்று தப்பாமல் அனைத்துக்கும் சிவாகம சம்மதம் இது என்று சுட்டிக்காட்டுவதாய் ஆலயங்களுக்கு வழிகாட்டியாய் அமைந்ததாலோ என்பது கனு.

கனவு நனவு ஆகும் வகையில் தேவி சந்நிதியில் குறிப்பிட்ட சங்கம் உதயமாவதாக என்று திருவருளை வேண்டுதல் செய்து நல்ல காரியங்களுக்கு மக்களின் மனத்தைப் புனிதப்படுத்தும் வகையில் 17-4-1981 இல் நிகழும்

தெல்லிப்பழை அருண்மிகு தேவஸ்தான
மகா கும்பாபிஷேகம் அமைவதாக என்று

திருவருளை முன்னிட்டு
வாழ்த்துவோமாக.

இலக்கிய கலாநிதி
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

எதிர்க்கட்சி முதல்வர்

திரு. அ. அமிர்தலிங்கம், பா. உ. அவர்கள்

வழங்கிய

# வாழ்த்துரை

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றிலும் சிறந்து விளங்குவது எமது ஈழவள நாடு. நாயன்மார் தேவாரங்களிலும், அருணகிரிநாதர் திருப்புகழிலும் போற்றப்பட்ட பெருமையை இத்திருத்தலங்களில் சில பெற்றிருக்கின்றன. பழமை வாய்ந்த இத்திருத்தலங்களுள் ஒன்ருக, இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுமெருகு பெற்று இத்திருநாட்டின் சகல பாகங்களிலுமுள்ள மக்களுக்குத் திருவருள் பொழியும் அன்னையின் திருத்தலமாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் சிறந்து மிளிர்கின்றது.

இலைமறைகாய் போல் அன்று நின்று திருவருள் பாலித்த துர்க்கை அம்மனை இன்று மக்கள் மத்தியில் வெளிக்கொணர்ந்து நின் துணையின்றேல் நாமில்லை என்ற அளவிற்கு அருள்சுரக்கும் நிலையை ஏற்படுத்திய தேவிக்கோர் ஆலயமும் இராஜ கோபுரமும் அமைத்து சக்தி இன்றேல் சிவம் இல்லை; சிவம் இன்றேல் சக்தி இல்லை என்ற அருள்வாக்கை உணர்த்தும் வகையில் தம் திருப்பணியை மேற்கொண்டு வரும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினரின் துர்க்கா தொண்டு போற்றத்தகுந்த தொன்று.

விபரமறிந்த நாள் முதலாய் அன்னையின் பணியைத் தன்பணியாக்கி அத்திருப்பணியைத் தன் உயிர்மூச்சாக்கிச் செயற்பட்டுவரும் துர்க்கா துரந்தரி, திருவாசகக்கொண்டல், சிவத்தமிழ்ச்செல்வி, செஞ்சொற் செம்மணி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் தொடர்ந்து வருகின்ற இத்திருப்பணி மென்மேலும் பரந்து அன்னையின் புகழ் பார்முழுதும் பரப்பி சிறப்புடன் திகழ அம்பிகையின் அருள் கிட்டுமாக.

வானுயர்ந்த இராஜ கோபுரத்துடன் அன்னையின் ஆலயம் சகல நிலைகளிலும் பூரணத்துவம் பெற்று இவ்வாண்டு சித்திரைத் திங்கள் 17ஆம் நாள் மகாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இத்திருநாளில் இலட்சோப இலட்சம் மக்கள் துர்க்கை அம்மனைத் துதித்தால் துன்பங்கள் பறந்தோடும் என்ற மனநிறைவுடன் அன்னையின் அருள்நாடிவரும் வேளை, ஆலய முன்றிலில் நடைபெறும் சைவசிந்தாந்த மாநாட்டினையும் கண்டு தன்னிறைவு பெறும் அரும்பேறு, மானிடப்பிறவியில் கிடைத்தற்கரியதொன்று.

ஆலயத்தைச் சகல நிலைகளிலும் பூர்த்தி செய்த பின்னரும், சைவமும், கலைகளும், அன்னையின் சந்நிதியில் வளர்ச்சிபெற தொடர்ந்தும் திருப்பணிகள் சிறப்புற அமைந்து ஆலயங்களுக்கோர் முன்மாதிரியாக ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் விளங்கவேண்டுமென உளம் கனித்துருக தேவியை இறைஞ்சுகிறேன்.

துர்க்கை அம்மனுக்கு நடைபெறும் மகாகும்பாபிஷேகமும் அதையொட்டி நடைபெறும் சைவசித்தாந்த மாநாடும் மிகச் சிறப்புடன் அமைய என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

அ. அமிர்தலிங்கம்

யாழ்-பல்கலைக்கழகத் துணைவேந்தர்
**பேராசிரியர் கலாநிதி**
**சு. வித்தியானந்தன் அவர்கள்**
**வழங்கிய**

# வாழ்த்துரை

அருள்மிகு துர்க்காதேவி ஆலயத்தின் மகாகும்பாபிஷேக விழாவினையொட்டி வெளிவருஞ் சிறப்பிதழுக்கு இவ்வாழ்த்துரையினை எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நாள்தோறும் பெருகிவரும் அடியார்களுக்கு அருள்பாலித்து வரும் அன்னை துர்க்காதேவி மூன்று வருடங்களுக்கு முன்னர் சித்திரத் தேரிலே பவனி வந்தாள். "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பர். கோயிலுக்கு அண்மையிலே செல்ல வாய்ப்பும் வசதியும் பெருதவர்களும் கூட தூரத்தே நின்று கோபுரத்தைத் தரிசிக்கலாம். ஒவ்வொருநாளும் காங்கேசன் துறை வீதியால் பயணஞ் செய்யும் பல்லாயிரக்கணக்கானோர் அன்னையை மனதிலே எண்ணித் தரிசிக்கும்படியாக இராஜகோபுரம் கட்டி முடிவடைந்துள்ளது. இலிங்கமூர்த்திகள் பல புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இன்று ஆலயத் திருப்பணிகளெல்லாம் அவனருளாலே முடிவடைந்துள்ளன. அவற்றுக்குத் திருக்குடமுழுக்கு நடைபெறவிருக்கின்றது. துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் மேற்பார்வையிலே இவ்வாலயம் பல்லாயிரக்கணக்கான அடியார்களுக்கு ஆன்மீகப் பலத்தினை அளித்து வருகின்றது. நித்திய நைமித்தியக் கிரியைகள் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன.

அடியேன் வாழும் தெல்லிப்பழைப் பதிக்குக் காவல் தெய்வமாகவும், அப்பதிக்குத் பல திசைகளிலும் புகழ்தேடித் தருபவளாகவும் அமையும் அன்னையின் பாதார விந்தங்களைத் தொழுது இவ்வாழ்த்துரையினை அனுப்புகிறேன்.

தேவஸ்தானத் தலைவரும் அந்தணப் பெருமக்களும் இவ்வாலயத்தினை மேலும் செவ்வனே நடத்த அன்னை அருள்பாலிப்பாளாக.

**சு. வித்தியானந்தன்**

அகில இலங்கை இந்துமா மன்றத் தலைவர்

இளைப்பாறிய நீதியரசர் மாண்புமிகு

திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இந்நாட்டில் சைவசமயம் விளங்கிவந்துள்ளது என்பது சரித்திர ஆராய்ச்சியாளர்களின் முடிபு. எமது ஈழமணித் திருநாட்டில் பாடல்பெற்ற சிவஸ்தலங்கள், பண்டைப் பெருமையை எடுத்துக் கூறும் ஆலயங்கள் மட்டுமல்ல, அருள்பரப்பும் புகழ்பூத்த சக்தி ஸ்தலங்களும் வேண்டுவார்வேண்டும் வரம் ஈந்து விளங்குகின்றன.

மூர்த்தி, தீர்த்தம், விருட்சம் ஆகிய சிறப்புக்களைத் தன்னகத்தேகொண்டு, புராதன நகுலேஸ்வரத்துக்கும், புகழ்மிக்க மாவிட்டபுரத்துக்கும் அண்மையிலுள்ள தெல்லிப்பழையில் அமைந்துள்ள அருள்மிகு துர்க்காதேவி ஆலயம் இன்று பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் குழுமும் புண்ணியத் தலமாக விளங்குகின்றது,

புராதனமான இவ்வாலயம் கடந்த கால் நூற்றுண்டு காலத்தில் எய்தியுள்ள வளர்ச்சி அம்பாளின் அனுக்கிரகத்திற்குக் கண்கண்ட சாட்சியாகத் திகழ்கின்றது. துர்க்காதேவி அம்பாள் தினமும் புரிகின்ற அனுக்கிரகத்துக்குத் தம்மை ஆட்படுத்திக்கொள்வதற்கெனப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அங்கு குழுமுவதும் தினசரி வழக்கமாகி வருவதை அறியும்போது அம்பாள் புரிந்துவரும் புதுமைகள் நம்மை எல்லாம் சிலிர்க்க வைக்கின்றன.

இவ்வாறு அருளும் புகழும் ஒருங்குகூடி விளங்கும் துர்க்காதேவி திருக்கோவிலில் மூலமூர்த்திக்கும், பரிவாரமூர்த்திகளுக்கும், பல லட்ச ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்துக்கும் மகா கும்பாபிஷேகப் பெருவிழா இப்போது நடைபெறுவது சைவ உலகுக்கு எழுச்சியும், பக்தர்கள் உள்ளங்களுக்குப் புதிய மலர்ச்சியும் தரும் வைபவமாகும்.

அம்பாளின் குன்றாத அனுக்கிரகமும், தம் கண்கண்ட தெய்வத்துக்குப் பக்தர்கள் செலுத்தும் அர்ப்பணிக்கப்பட்ட உழைப்புமே இவற்றின் காரணமாகும். சைவப்பணிக்கே எனத் தம்மைச் சமர்ப்பித்துச் செயலாற்றிவரும் 'துர்க்காதுரந்தரி' பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் அமைந்த நிர்வாகசபையினரின் தொண்டு சைவமக்களால் போற்றப்பட வேண்டியது.

பெருஞ் சாந்தி விழாக்காணும் துர்க்காதேவியின் கருணைகடாட்சம் எம் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

**வீ. சிவசுப்பிரமணியம்**

# பகவதி பாதம் பரவுமினே

## பௌராணிக வித்தகர் வ. குகசர்மா

வாழ்த்துவம் நின்னருள் வாயது கொண்டு மலரடிகள்
தாழ்த்துவம் சென்னி தழல்முன் மெழுகெனத் தானுருக
ஆழ்த்துவம் உள்ளம் அருளது பெற்றெம் அவலமெல்லாம்
பாழ்த்துவம் யாம்செய் பயனுறு செய்கை பகர்ந்திடினே.

பகர்ந்திடு மெண்ணெண் பயிலுங் கலைகள் பரிந்தருளி
புகழுடை யெண்ணெண் பொருந்துறு மாதர் புடைபயில
தகவுடை யெண்ணெண் தருமுப சாரந் தனைவிரும்பி
மிகவருள் செய்து விளங்கியே தெல்லி மேவுவளே.

மேயினள் தாமரை மென்வனஞ் சிந்தா மணியெனும்பேர்
மாயிருள் நீக்கும் மணிபல சேர்தரு மாளிகையும்
சேயினள் வஞ்சகஞ் சேருளத் தார்க்குறு சிந்தையுன்ன
போயின துன்பம் புகுந்ததென் னுள்ளம் புதுமகிழ்வே.

மகிழ்வுடன் மங்கள வாசம் பழமும் மலருடனே
நெகிழ்வுட னேந்தி நிறைவுடன் செல்லும் நெறியினர்க்கு
முகிழ்வுறு கல்வியும் முன்னுறும் வாழ்வு முவந்தருள்வாய்
அகிலமும் போற்ற அறம்வளர் தெல்லி அருள்நிதியே.

நிதியாம் வணங்கும் நினைவுடை யோர்மனம் நீங்கலில்லா
மதியாம் மறுவில் மறைகள் துதிக்கும் மாண்பொருளாம்
கதியாம் நமக்குக் கருதிடிற் றெல்லி கனிந்தருளும்
பதியாம் தலங்கொள் பகவதி பாதம் பரவுமினே.

சென்னை, கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜெகந்நாதன் அவர்கள்
வழங்கிய


# வாழ்த்துரை

## அன்பர் துதித்தேத்த நாளும் நன்மை பெறுக


இலங்கைத் தீவந் தனில்இலங்கும்
இனிய தெல்லிப் பழைதன்னில்
நலங்கொள் அன்பர் துதித்தேற்றி
நாளும் நன்மை பெறும்தேவி
மலங்கள் நீக்கும் துர்க்கையம்மை
மாட்சி சான்ற குடமுழுக்கங்கு
இலங்க நிகழும் எனக் கேட்டேன்
இன்பக் கடலிற் சூழ்ந்தனனே!

புதிய ராஜ கோபுரமும்
புதிய அமைப்புப் பலப்பலவும்
விதியிற் கும்பா பிஷேகங்கள்
மேன்மை பெறவே பெறுமென்ற
அதிக இன்பச் செய்தியறிந்
தானந் தங்கொண் டிருக்கின்றேன்;
மதிகொள் சடையான் திருவருளால்
மாட்சி பெறவே நிறைவுறுக!

கி. வா. ஜெகந்நாதன்



தேவஸ்தானத்தின்பேரில் தலைவர் அவர்களுக்கு பிரதான சிவாசாரியார்
காப்புக் கட்டல்



வரிசையாக நின்று எண்ணெய்க் காப்பணியச் செல்லும் காட்சி

திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபைத் தலைவர்
திரு. மு. கோ. செல்வராசா அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

சைவசித்தாந்த மகாசமாஜத்தின் பவளவிழா கண்டு இறும்பூதெய்தாத, எழுச்சி பெருத, மகிழ்ச்சியுருத சைவன் இருக்கமுடியாது.

தமிழன் வாழ்வுக்கு உயிர்ப்பாக, உயிராக விளங்கும் சைவ நெறியை, சிவநெறியைப் பரப்பும் பணியைத் தொண்டாகக் கொண்டது சைவசித்தாந்த சமாஜம்.

சிவநெறியை சைவம் கூறும் சீலத்தை தம் வாழ்க்கை நெறியாகப் போற்றும் தமிழர்கள் வாழும் ஈழவள நாட்டில் இவ்விழா இனிதே நிகழ்வது சாலவும் சிறந்தது.

இவ்விழா தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி அம்மன் திருக்கோயிலில் சிறப்பாக நிகழ்வது மேலும் மகிழ்ச்சி தருகிறது.

சமயப் பணியும் சமுதாயச் சேவையும் ஆற்றும் திருவிடமாகத் திருக்கோயில்கள் விளங்கவேண்டு மென்பது நமது வேணவா ஆகும். இதற்கு திருப்பணி, தெய்வப்பணி இங்கு நிகழ்வது நம்பிக்கை தரும் செயலாகும்.

இவ்விழாவில் தரும் செய்தி இவ்விழா தீட்டும் திட்டங்கள் அனைத்துலக சைவமக்களுக்கும் நன்மை தருதல் வேண்டும்.

தொல்பதியாம் திருக்கோணேஸ்வரத்தில் மகா கும்பாபிடேகம் நிகழ்ந்த இப் புனித ஆண்டில் நடைபெறும் சைவசித்தாந்த மாநாடு வெற்றிகாணக் கோணேசப் பெருமானை வழுத்தி நிற்கிறோம்.

மு. கோ. செல்வராசா

தெல்லிப்பழை, தேவி துர்க்கா இராசகோபுர மகா கும்பாபிஷேகத்தின்போது

தரிசனம் செய்த

தென்மராட்சி பாத யாத்திரீகர்களால் பாடப்பட்ட

# பாமாலை

### வெண்பா

துன்மதி ஆண்டிலங்கு தூலலிங்க கோபுரத்தை
நன்மதியாஞ் சித்திரை நாளேந்தில் — விண்மதியாள்
தெல்லிதுர்க் காதேவி தேவலிங்கத் தாற்பெற்றுள்
அல்லிமலர் நாஞ்சொரிவோம் அன்று.

### விருத்தம்

புற்றெடுத் திருந்தாய் தாயே புதரிலே மறைந்திருந் தாய்
கற்றவர் கண்டுங் காணுர் கருத்தினிற் கொண்டார் இல்லை
நற்றவம் செய்த தங்கம் நம்மனேர்க்கு உன்னைக் காட்டி
பெற்றஇப் பிறவிப் பேறும் இகபரம் இரண்டும் பெற்ருள்.

காவலர் இரகுநாதர் நல்லூர்க் கந்தனை முன்னுள் காட்ட
நாவலர் தேன்பொந் தொன்றை நற்கேதீச் சரத்திற் காட்ட
ஏவலர்போ லென்றுந் தொண்டு இயற்றிய தங்கம் இன்று
பாவலர் போற்ற நின்ற பராபரை கோயில் கண்டாள்.

தலைவியை மூலம் வைத்தாள் தனயரைப் பாங்கர் வைத்தாள்
சிலையுறு பரிவாரம் கோள்கள் சேர்இடம் தோறும் வைத்தாள்
விலையிலாத் தம்பம் இன்னும் வேண்டிய வசந்தமண் டபங்கள்
நிலையிலா மனத்தை நாமும் நிறுத்தியே வணங்கத் தந்தாள்.

விம்பத்தில் மூல மூர்த்தியாய் விளங்குந் துர்க்கை கண்டோம்
தம்பத்தின் ஒளியாய் நிற்கும் தாயையும் கண்டோம்; இன்று
கும்பத்தின் தீர்த்தம் ஆட்டும் கோபுரம் அதிலும் கண்டோம்
நம்பத்தான் முடியா தம்மா! நம்மனேர்! தங்கம்மாவா லென்ருல்.

மூவரும் முனிவர் விண்ணேர் முழுமுதற் புராணங் கூறும்
யாவரும் விளங்கத் தோன்றும் இராசமாகோ புரத்தைத் தந்தான்
பாவரும் சிற்ப நூலைப் பழுதறக் கற்ற மேதை
தேவலிங்கம் என்னும் பேரான் தெய்விகத் தபதி மாதோ!

அன்னவன் உள்ளிட் டார்தம் அரும்பெரும் சிற்ப மேன்மை
பன்னருந் தமிழால் நாமும் பகர்ந்திட முடியா; உண்மை
வன்னஆதி சேடன் தானும் வகுத்திட மாட்டான் என்ருல்
இன்னனுள் அதனைக் காண்பார் எப்படிப் புகழ்வார் அம்ம!

திருப்பரங் குன்று கண்ட தெய்விக விழவோ அன்றி
பொருப்பினிற் சிறந்த பொற்றை பொருந்திய மணமோ அம்ம!
அருப்பொடு அபிடே கங்காண் அணிதுர்க்கை விழவு தன்னை
விருப்பொடு எதற்கு நாமும் விளம்புவோம் உவமை வேறே.

தந்திர முறையாற் கோபுரத்தைத் தந்த தபதியார் வாழ்கமேலாம்
மந்திர தீர்த்தம் ஆட்டும் மாண்புறு வேதியரும் வாழ்க
பந்தம தகற்றும் பாடல் பாடியபூ ஷணங்கள் போதர்
எந்தரம் வணங்க வைத்த எழிற்தங்கம் சபையார் வாழ்க,

சரசாலை 17-4-81 பாரதிதாசன்

உ

# தெல்லியூர்த் துர்க்கைத் தாயே!

துரியவரி யேறிவரு சோதியே அடியர்தாம்
துய்க்கின்ற சுவையமுதமே
உரியபல வுலகுகாத் தருளுமுமை யேயீச
னுவகைகா ணுடலாலே
துரியபக் குவவீடு முதவுபார் வதி,ஞான
சுகமதுர மீகுவாய்,பாத்
தெரியலுயர் கோபுர மயூரனல் லிசைசொல்லு
தெல்லியூர்த் துர்க்கைத்தாயே.

*அருட்கவி சி. விநாசித்தம்பி*
*17–4–81*

உ


# கோபுர விருத்தம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | தெ | | | | | |
| | | | | சொ | ல் | லு | | | | |
| | | | | சை | வி | ல் | | | | |
| | | | ர | ம | யூ | ர | ன | | | |
| | | | பு | கோ | ர் | ய | லு | | | |
| | | வா | ய் | பா | த் | தெ | ரி | ய | | |
| | | கு | மீ | ர | து | ம | க | சு | | |
| | மு | த | வு | பா | ர் | வ | தி | ஞா | ன | |
| | டு | வீ | வ | கு | க் | ப | ய | ரி | து | |
| யே | யீ | ச | னு | வ | கை | கா | ஞ | ட | லா | லே |
| மை | மு | ளு | ரு | த | த் | கா | கு | ல | வு | ல |
| | | உ | ரி | | | | ய | ப | | |
| | | மே | த | | | | மு | ய | | |
| | | ன் | ற | | | | சு | வை | | |
| கி | க் | ய் | து | ம் | தா | ர் | ய | டி | அ | யே |
| து | ரி | ய | வ | ரி | யே | றி | வ | ரு | சோ | தி |

**அருட்கவி சீ. விநாசித்தம்பி**



மகா கும்பாபிஷேக விழாவில்
மங்கல வாத்தியக் கலைஞர்கள்



ஸ்தூபி அபிஷேகம்

# எங்கள் கண்கண்ட தெய்வம்

## 'துர்க்காதுரந்தரி' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

[பரிபாலன சபைத் தலைவர், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்]

எங்கு தர்மம் இருக்கிறதோ அங்குதான் வெற்றி என்பது மகா பாரதக் கதை. தர்மத்திலிருந்துதான் பொருள், இன்பம் முதலிய அனைத்தும் விளைகின்றன.

நம் நாட்டில் இத்தகைய தர்மத்தைப் போற்றி, திருக்கோயிற் கடமைகளை உள்ளத்தில் ஏற்றி அரும்பணி ஆற்றுபவர்கள் ஒருசிலர் இருப்பது நாடு செய்த தவப்பயனாகும்.

திருக்கோயில்கள், அன்னசத்திரங்கள், பொதுக்கிணறுகள், இலவசக் கல்விக்கூடங்கள், வைத்தியசாலைகள், தர்மஸ்தாபனங்கள் யாவும் இவ்வுண்மையை எடுத்துக் காட்டுகின்றன.

ஒவ்வொரு தர்மத்திலும் எப்படியாவது தமது பங்கும் இருக்க வேண்டுமென்று பலர் விரும்புவது கண்கூடு.

'' தர்மம் '' என்ற சொல் பலவித பொருள்களைக் கொண்டது. பொதுவாக வேதங்களும் அவற்றைத் தழுவிய நூல்களும் '' எதைச் செய் '' என விதிக்கின்றனவோ அவைதான் தர்மம். எதைச் செய்யாதே என விதிக்கின்றனவோ அவைதான் அதர்மம்.

தர்ம காரியங்களில், மிக உயர்ந்ததாகப் போற்றப்படுவது திருக்கோயில் கட்டுதலும், திருப்பணிகள் செய்தலுமாகும்.

இவற்றை ஒரு தனிப்பட்டவர் எளிதில் செய்ய இயலாது.

மகா சக்தி வாய்ந்த மகான்களாலும், தெய்வ உள்ளம்படைத்த மாமன்னர்களாலுமே இவை செய்யப்படக்கூடியவை என்பது அனைவரும் அறிந்ததே.

இவ் ஆலய வரலாறும் மகான்களின் ஆசி பெற்ற சிறப்பைப் பெற்றது. கீரிமலை மாவிட்டபுரம் ஆகிய பழமை வாய்ந்த தலங்களுடன் தொடர்புபட்ட பூர்வீகம் இவ் ஆலயத்துக்கு உண்டு.

பத்து ஆண்டுகள் காசியிலிருந்து துர்க்கை உபாசனை புரிந்த ஒரு பெரு ஞானியால் ஆதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம் இது.

கொழும்புத்துறை முனிவர் தவயோக சுவாமிகளின் நல் வரவுக்கு இடமளித்த ஆலயம் இது. ஸ்ரீ ஹரிதாஸ் கிரி சுவாமிகளின் அபிமான க்ஷேத்திரம் இது. இன்னும் பல ஆத்மீக சக்திகளால் பொலிவு பெற்ற இக்கோயில் இன்று பல்லாயிரக்கணக்கான மக்களின் வருகையாலும் வழிபாட்டாலும் சிறப்புப் பெற்றுள்ளது.

இங்கு வருகைதரும் இலட்சோப லட்சம் மக்களின் ஆதரவு திரண்டு இன்றைய தினத்தில் மகாகும்பாபிஷேகம் காணும் புண்ணியம் நம்மனைவருக்கும் கிட்டியுள்ளது.

''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' என்று ஒவ்வொருவர் உள்ளத்திலும் நினைக்கத் தோன்றுகின்றது.

அன்னையின் திருக்கோயில் தனது சின்னமாக வானுயர் கோபுரத்தைக் கொண்டு மிளிர்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

''கோபுரஞ்சூழ் மணிமாடக்
கோயில் கண்டேன்
குனித்துபல அலங்கார
வளைவு கண்டேன்
தேவர்களும் உவந்தேத்தும்
ஸ்தூபி கண்டேன்
திருமுறைகள் வேதமொடு
ஒலிக்கக் கண்டேன்
ஏவல்புரி ஏந்திழையார்
எழிலும் கண்டேன்
இளைஞர்பணி சரியைவழி
இயற்றக் கண்டேன்
பாவலர்கள் பண்ணுரைப்
பாடக் கண்டேன்
பராபரையின் சந்நிதியில்
யாவும் கண்டேன்''

என்பது சிறியேன் அனுபவமாகும். இவ்வனுபவம் இங்கு வந்து வழிபாடு செய்யும் அனைவருக்கும் பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

கும்பாபிஷேகத்தின் பயன் :-

'' புல்லினால் வருடம் கோடி
புதுமண்ணால் பத்துக் கோடி
செல்லுமா ஞாலந் தன்னில்
செங்கல்லால் நூறு கோடி
அல்லியங் கோதை பாகன்
ஆலயம் மடால யங்கள்
கல்லினால் கட்டி வைத்தோர்
கயிலைவிட் டகலார் அன்றே.''

# துர்க்கையைத் துதித்தே துயர்களைத் தவிர்ப்போம்

**புலவர் ந. ரா. முருகவேள் அவர்கள்**

(ஆசிரியர், திருக்கோவில்)

பராசக்தியே துர்க்கை என்னும் பெயரும், வடிவமும் கொண்டு, பக்தர்களுக்கு அருள் புரிந்து, உலகைப் பரிபாலித்து வருகின்ருள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுகமுடியாமற் செய்வதுபோல, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பம் அணுகா வகையிற் காத்தலால், இவள் துர்க்கை எனப் பெயர் பெற்ருள். துர்க்கை அரசர்க்கும், வீரர்க்கும் உரிய வழிபடு தெய்வம். ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில் கௌரி, லட்சுமி, சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஒருருவமாகத் திகழ்பவள் துர்க்கை. இவள் அக்கினிகலை, சூரியகலை, சோமகலை என்னும் முக்கூறும் தன்பாற் கொண்டவள். நாம் நம் ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி துர்க்கநுந்தம் என்னும் மத்திரம் ஓதி அருச்சனை செய்து வழிபட்டால் எல்லா இன்னல் களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளிலும் முறையே சங்கு, சக்கரம், வில், அம்பு ஏந்தி யிருப்பாள். தலையில் முடியும் பிறையும் சூடியிருப்பாள். சிங்க வாகனமும், பசும்புல்லின் நிறமும் கொண்டவள். மானும் இவளுக்கு வாகனம் ஆகும்.

இவளைக் கொற்றவை எனவும் கூறுவர். எருமைத் தலையை உடையவனுக இருந்த மகிஷன் என்னும் கொடிய அசுரனை வென்று கொன்றதனுல் இவளுக்கு மகிஷாசுரமர்த்தினி எனப் பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்தின் பல கோயில்களிலும் மகிஷாசுரமர்த்தினி யின் அழகிய சிற்பங்களைக் காணலாம். மகாபலிபுரம, கங்கைகொண்ட சோழபுரம், நாமக்கல் முதலிய இடங்களில் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புதச் சிற்பத் திரு வுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் இளங்கோவடிகள் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புதச் சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் இலங்கோவடிகள் மகிஷாசுரமர்த்தினியின் திருவுரு வத்தினைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து காட்டியுள்ளார்.

அவள் யானைத்தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கின்ருள். வானேர்கள் வணங்க மறைமேல் மறையாகி ஞானக் கொழுந்தாய் விளங்குகின்ருள். வளையணிந்த கைகளில் வாளேந்தி இருக்கின்ருள். மான் ஊர்தியில் ஏறி, மகிஷனை அழித்தாள். அரி, அரன், அயன் என்னும் மூவரின் இதய மலர்களில் சோதி விளக்காகச் சுடர்வீசி வயங்குகின்ருள். அவளது தாமரை போன்ற கைகளில் சங்கும். சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களை உடைய சிங்கத்தின்மீது இவர்ந்து வருகின்ருள். சிவபிரானின் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்ற அவளை வேதங்களெல்லாம் தொழுதேத்திப் பணிபுரிகின்றன.

அத்தகைய சிறப்புமிக்க துர்க்காதேவி யம்மையின் திருக்கோயில். இலங்கை-யாழ்ப்பா ணம்—தெல்லிப்பழையில் சிறப்புற அமைந்து வரும் சித்திரைத் திங்கள் ஐந்தாம் நாள் மகா கும்பாபிஷேகவிழா சிறப்புற நிகழவிருப்பது அறிந்து பெரிதும் மகிழ்கின்றேன். விழா மிகவும் சிறப்புற நிகழ்வதற்கு அருள்மிகு துர்க்காதேவியம்மையின் திருவடிகளைச் சிந்தித்து வந்தித்து வணங்குவதுடன், இத்திருக்கோயில் சிறப்புற அமையவும், மகாகும்பாபிஷேக விழா நன்கினிது நடைபெறவும், பெரு முயற்சிகள் மேற்கொண்டு உழைத்துத் தொண் டாற்றிய மேற்படி தேவஸ்தான நிர்வாக சபையின் தலைவர் திருமிகு 'துர்க்காதுரந்தரி'

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும், திரு. நம. சிவப்பிரகாசம், திரு. த. பொன்னம்பலம் ஆகிய உப தலைவர்கள், திரு. க. சிவவாகீசர், திரு. க. தணிகாசலம் ஆகிய இணைக்காரியதரிசிகள், திரு. க. கணேசரத்தினம், திரு. ஐ. சண்முகநாதன் ஆகிய தனாதிகாரிகள் முதலிய பெருமக்கள் பலருக்கும் என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல் களையும் அன்புமிக்க வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மகா கும்பாபிஷேக விழா சிறப்புற நிகழ்வதற்குப் பொறுப்பேற்றுச் சிறப்பிக்கும் பிரதான சிவாச்சாரிகள், உதவிச் சிவாசாரியர்கள், சாதகாசிரியர்கள், இராஜகோபுரம் எழிலுற அமையச் சிறந்த முறையில் பணிபுரிந்த கௌரவ ஸ்தபதி தமிழ்நாடு வளவனூர் திரு. எஸ். தேவலிங்கம் முதலிய எல்லோருக்கும், என்னுடைய அன்பு வணக்கமும் பாராட்டுதலும் உரியனவாகும்.

அருள்மிகு துர்க்காதேவியம்மையின் திருவருள் அனைவருக்கும் அனைத்து நன்மைகளும் அருள் புரிந்து நலம்பல விளைவிப்பதாக!

# நல்ல வண்ணம் வாழ இன்று வழி தோன்றும்

நம. சிவப்பிரகாசம் அவர்கள்

*(ஆசிரியர், இந்துசாதனம்)*

*(உபதலைவர், பரிபாலனசபை)*

திருமுறை ஓதுதல், புராண படனம் செய்தல், சித்தாந்த சாஸ்திரங்களைச் சிந்தித்தல், ஏழிசை இன்பத்தை இயங்க வைத்தல் இவையெல்லாம் துர்க்காபுரத்திற்குரிய பண்பாகும்.


வேதசிவாகம வித்தகர்கள் விதிமுறை வழுவாது சிவாசாரியக் கிரியைகளைச் செய்யும் சிறப்பினைக் காண்போர் இங்கு திருக்கயிலாய பரம்பரைச் செந்நெறியை நினைத்துக் களிப்பர்.

திருமுறை ஓதும் பயிலும் சிவனடியார்கள் தரும் பண்ணிசை பசுமையின்பமும் நாதசுரக் கலைஞர்கள் கூட்டும் இசையின்பமும் புராணங்களிற் புகழப்பெறும் கிம்புருநாதர்களின் கீதவின்பம் எவ்வாறிருக்கும் என்று ஒருவாறுணர்வர்.


தொண்டு புரிந்து துர்க்காதேவியின் திருத்தலத்தின் தூய்மையைப் பேணிக்காக்கும் பண்பாளர் திருக்கூட்டத்தின் அயராத் தொண்டினை உற்று நோக்குவோர் துர்க்கா சூழலிலே தெய்வீக மின்ஆற்றல் நிலவுகின்றதென்றறிந்தின்புறுவர்.

இவற்றுக்கெல்லாம் மேலாக எண்ணுக்கடங்காப் பக்தர் குழாத்தின் அன்புப் பரவசப் பிரவாகம் துர்க்கையின் அருள் நீரூற்றைப் போன்றிருப்பதே புதுமை.

புத்தாண்டுப் பெருந்திரு நிகழ்ச்சியாகும் மகாகும்பாபிஷேகம், மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் இராஜகோபுரத்துக்கும் சாந்திவிழா நடைபெறும்பொழுது மண்ணில் நல்லவண்ணம் வாழ வழிதோன்றும்.



இராஜ கோபுர கும்பாபிஷேகத்தை
எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் அடியார் கூட்டம்



இராஜ கோபுரக் குடமுழுக்கு

# 3 ஆண்டுகளில் ரூபா 9 லட்சம் செலவில் நிறைவேறிய இராஜகோபுரம்

சு. சிவவாகீசர் அவர்கள்
(செயலாளர், தர்மகர்த்தாசபை)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் துர்க்கை அம்பாளை மூலமூர்த்தியாகக் கொண்ட பழமையான தனிப்பெருங் கோயிலாக ஈழத்தின் வடபால் தெல்லிப்பழையில் பொலிவுடன் அமைந்துள்ளது. வரலாற்றுப் பெருமை மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துடன் நீண்டகால நெருங்கிய தொடர்பு கொண்டது இத்தலம். மாவை முருகப்பெருமான் ஆலயத்தில் கிடைக்கப்பெற்ற ஏட்டுச்சுவடிகளில் குறிக்கப்பட்டுள்ள செய்திகளின்படி அத்தலம் வெண்கல் திருப்பணி நிறைவேறி 1815இல் மகாகும்பாபிஷேகம் நடைபெற்று ஐந்து ஆண்டுகளின்பின் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு சிறிதுகாலம் கிலமடைந்த நிலையிலிருந்து கோயிலைப் புனருத்தாரணம் செய்ய அம்பாள் அடியார்கள் முன்வந்தனர். ஆலயத் திருப்பணிகள் 1953ஆம் ஆண்டில் ஆரம்பமாகி 1965ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் திருவோணத்தில் மகா கும்பாபிஷேகம் மாவை ஆதீனகர்த்தா சிவஸ்ரீ து. ஷண்முகநாதக்குருக்களால் சிறப்பாக நிறைவேற்றப் பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் ஆலய மண்டபங்கள் அமைக்கும் திருப்பணி, புதிய சித்திரத்தேர்த் திருப்பணி, இராசகோபுரத் திருப்பணி போன்ற பாரிய திருப்பணிகள் அசுர வேகத்தில் நடைபெற அம்பாள் அனுக்கிரகம் கிடைக்கப்பெற்றது. ஆலய நிர்வாகசபைத் தலைவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் துர்க்கை ஆலயத்தின் முழுநேரத் தொண்டராக விளங்குவதுடன் அவர் தமது சமய சொற்பொழிவுகள் மூலம் ஈழத்திலும் வெளிநாடுகளிலும் அம்பாள் அருளைப் பரப்பி ஆங்காங்குள்ள பக்தர்கள் எல்லோரும் துர்க்காதேவி ஆலயத்திற்கு வந்து வழிபாடு செய்து திருப்பணிக்கு நிதி வழங்கியுள்ளனர். ஆலயத் திருப்பணிகள் முட்டின்றி நடைபெறுவதற்கும் அம்பாள் ஆலயம் புதுப்பொலிவுடன் விளங்குவதற்கும் பக்தர்கள் பேராதரவு புரிந்துள்ளனர்.

ஆலயத்தின் கிழக்கு நோக்கிய வாசலில் பொலிவுடன் திகழ்கின்ற இராச கோபுரம் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டது. ஐந்து வாயில்களையும் அறுபத்துமூன்றுஅடி உயரத்தையும் கொண்ட இக்கோபுரம் புராணசம்பந்தமான சிற்பங்களையும் மற்றும் வடிவங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழகத்திற்குச் சென்று சென்னை ஞானனந்த சமாஜத் தலைவராகிய ஸ்ரீ ஹரிதாஸ் கிரி மகராஜ் அவர்களின் ஆலோசனைப்படி தமிழ்நாட்டில் தலைசிறந்த ஸ்தபதி வளவனூர் எஸ். தேவலிங்கம் அவர்களின் தலைமையில் கட்டிடக் கலைஞர்களை ஒழுங்கு செய்தார். இக்கட்டிடக் கலைஞர்கள் கடந்த மூன்றுண்டு காலமாக ஆலயத்தில் தங்கி அழகிய தோற்றத் தினையுடைய இராசகோபுரத்தை நிர்மாணித்துள்ளனர். ஏறக்குறைய ஒன்பது லட்சம் ரூபா செலவில் இது பூரணம் பெற்று மகா கும்பாபிஷேகங் காணும் பேறு எம்மனோர்க்குக் கிடைத்துள்ளது அம்பாளின் அருட்பெருங் கருணையேயாகும்.

'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே'.

புலவர் திரு. ரா. முருகவேள் அவர்கள்
கும்பாபிஷேக இதழில் (வீரகேசரி) எழுதிய கட்டுரையில்
குறிப்பிட்டுள்ள

# துர்க்கா ஸூக்தம் (தமிழாக்கம்)

1. அக்கினி வடிவில் விளங்கும் சக்திக்கு ஸோமரஸத்தைப் பிழிந்து தருவோம், அனைத்தையும் அறியும் அந்தச் சக்தி எமது பகைமைகளைப் பொசுக்கட்டும். அது எமது எல்லா ஆபத்துக்களையும் போக்கட்டும். கப்பலால் கடலைக் கடப்பதுபோல் பாவக் கடலிலிருந்து அக்கினி சக்தி நம்மை அக் கரை சேர்க்கட்டும்.

2. செந்தீ வண்ணத்தினளும், தனது ஒளியால் (பகைவர்களை) எரிப்பவளும், ஞானக் கண்ணால் காணப்பட்டவளும், கரும பலனைக் கூட்டி வைப்பவளுமான துர்க்கா தேவியை நான் சரணடைகின்றேன், பிறவிக் கடலை எளிதில் கடத்துவிப்பவளே ! கடத்து விக்கும் உனக்கு நமஸ்காரம்.

3. அக்கினி சக்தியே! போற்றத்தக்க நீ எங்களை நல்ல உபாயங்களால் எல்லா ஆபத் துக்களினின்றும் கரையேற்றுவிக்கவேண்டும். எங்களுக்கு வாசஸ்தலமும் விளைபூமியும் நிறையக் கூட்டிவைக்க வேண்டும். (எங்கள்) புத்திரர்களுக்கும் பௌத்திரர்களுக்கும் நன்மை அளிக்கவேண்டும்.

4. ஆபத்தைப் போக்கும் அக்கினி சக்தியே! கப்பலால் கடலைக் கடப்பதுபோல் எங்களை எல்லாப் பாவங்களினின்றும் கடத்து விப்பாய். அக்கினி சக்தியே! அத்ரி மகரிஷி யைப்போல் அனைவரும் இன்புறுமாறு மன தார அனுக்கிரகித்துக்கொண்டும் எங்க ளுடைய உடலை இரக்ஷித்துக்கொண்டும் இருக்கவேண்டும்.

5. எதிரிகளின் சேனைகளை வெல்லு வதும், அடக்குவதும் உக்கிரமானதுமான அக்கினி சக்தியைப் பரமபதத்திலிருந்து அழைக்கின்றோம். அச்சக்தி எல்லா ஆபத்துக் களையும் போக்குவதாகுக. அக்கினி தேவன் நமது பாவங்களைப் போக்கிக் குற்றங்களை மன்னிக்கட்டும்.


6. அக்கினியே! யாகங்களில் போற் றப் பெறும் நீ இன்பத்தை வளர்க்கின்றாய். கருமபலனை அளிப்பதும் ஹோமத்தைச் செய்வதும் ஸ்தோத்திரம் செய்யப்படுவதும் நீயே ஆகின்றாய். அக்கினி சக்தியே, உனது உடலையும் ஹவிஸ்ஸினால் இன்புறச் செய்து எங்களுக்கும் எல்லா ஸௌபாக்கியங்களை யும் அருள்வாய்.

7. இந்திரனிடம் விளங்கும் சக்தியே! பாவத் தொடர்பின்றி பாவனமான பொருட்களுடன் கூடி அமிருதத்தால் அபி ஷேகம் செய்யப்பட்டு எங்கும் பரவி நிற்கும் உன்னைச் சேவிக்கிறேன். சுவர்க்கத்தின் உச்சி யில் வசிக்கும் தேவர்கள் விஷ்ணு பக்தனை என்னை இவ்வுலகிலிருக்கும்போதே பேரின் பத்துக்குரியவனாக்குதல் வேண்டும்.

8. கன்னியாகவும் குமரியாகவும் உள்ள தேவியைத் தியானிக்கின்றோம். பரமேசு வரனுக்காகவே தோன்றி பரமேசுவரனை யடைந்த அவளை வழிபடுகின்றோம். அந்த துர்க்காதேவி எங்களை நல்வழியில் செலுத்தி ஆட்கொள்ளவேண்டும்.



இராஜகோபுரம் குடமுழுக்காட்டப்பட்ட சமயத்தில்
பக்தர்கள் பரவசமடைந்து கும்பிடும் காட்சி



மகாகும்பாபிஷேக விழாவுக்கு வருகை தந்த
பக்த கோடிகள்

# ஈழநாட்டு, யாழ்—தெல்லிப்பழை
# அருள்மிகு துர்க்காதேவி ஆலய வரலாறு

**நாட்டுவளம்:**

'நாடென்ப நாடா வளத்தன' எனப் பாடிய அறம், 'தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச் செல்வரும் சேர்ந்திருத்தலையும் எடுத்துரைப்பது நம் சிந்தனைக்குரியதாகிறது. நாடா வளம் எனப்படுவது, பொருட்செல்வம் மட்டுமோ? அருட்செல்வமுமே இணைத்துக் கொள்ளும்வகையிற் பொதுப்படக் காணுவதும் சிந்திக்கக்கூடிய ஒன்று.

**தக்கார்:**

'நார் பயில் தேயந்தன்னில் நான்மறை பயிலா நாட்டில் விரவுதல் ஒழிந்து' பிறந்திருத்தலால் 'மானுடத்து உதித்தல் கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியம்' என உணரும் உணர்ச்சி மீதூர, 'வாழ் வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனுந் தன்மை யோடும் சைவமாம் சமயம் சாரும் ஊழ்' பெற்றமையை நன்கு தெளிந்து, 'வாய்த்தது மன(ம்) வாக்(குக்) காயம் ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன் பணி'க்கே யாக்கும் 'மானிடப் பிறவி தானும் வாய்த்த'தென இதனை விழலுக் கிறைத்த நீராக்காமல் தெளிந்த சிந்தனையால் ஆன்மீகப் பெருஞ் செல்வத்தைச் சேமித்த நம்மை மேலை நாட்டவர் நாடுதல் ஏற்றுக்கெனத் தெளிந்து தேறல் இத்தலை முறையினது தலையாய கடனும்.

மிகமிகப் பழங்காலமாம் இராமாயண காலத்திற்கு முன்னிருந்தே ஈழநாடு சிறந்திருந்தமைக்குக் காரணம், ஆண்டு கைக் கொள்ளப்பெற்ற தெய்வங்கொள்கையேயெனல் மிகைக்கூற்றன்று. இராவணனின் தாய் நாள்தோறும் அதிகாலையிற் கடல் நீராடிச் சிவலிங்கந் தாபித்துப் பூசனை புரியும் வழக்கத்தை மேற்கொண்டவள். பூசை முடியுமுன் மணல் இலிங்கத்தை அலைகள் அழித்துவிடின், வேறு இலிங்கம் தாபித்துப் பூசித்து முடித்தபின்பே அரண்மனை திரும்புவாளாம். வேளை கடந்துவரும் அன்னையிடம் காரணம் கேட்டறிந்தபின், இராவணன் 'அம்மா' பூசிக்கக் கயிலாய மலையையே பெயர்க்க முனைந்ததால்தான், இறைவன் காற்சிறு விரலால் ஊன்றப்பெற்றுச் சிக்கிக்கொண்டு அழுது இராவணன் எனும் பெயர் பெற்றான்.

இராவணன்தானும் சிவபரஞ்சுடரைத் தவம்புரிந்து வேண்டியே வரம்பல பெற்றவன். பண்டுதொட்டே பரம்பொருளினிடத்துப் பற்றுவைத்து அறநெறி யொழுகிய நன்மக்களைப் பெற்றிருந்த காரணத்தால்தான் ஈழநாடு வளமிக்க நாடாய்த் திகழ்கிறது.

அணியணியாய்த் திரண்டெழுந்து, வண்ண வண்ணப் பூக்களைத் தாங்குவனவும், வாய்க்கினிய—உடற்கினிய பலவகைக் கனிகளையும் மருந்துப் பொருள்களையுந் தாங்கிக் கவினுற மலைகளின் மீதும் வளர்ந்தோங்கும் மரங்கள், மன்னுயிர்களை, 'உயிர் காப்போம், ஈண்டு வருக' என உரிமையுடன் அழைப்ப போன்று தம் கிளைக்கரங்களாலசைத்து வரவேற்குங் காட்சியை ஈழத்திலன்றி வேறெங்கே காண இயலும்?

அன்று (ஏழாம் நூற்றுண்டளவில்) திருஞானசம்பந்தப் பெருமான், 'விருது குன்றவா' எனத் தொடங்கும் திருக்கேதீச்சரப் பதிகத்திலே 'வாழை அம் பொழில் மந்திகள் மருவிய' எனவும், 'வண்டு பண்செய்யும் மாமலர்ப் பொழில் மஞ்ஞை நடமிடும்' எனவும், 'மாவும் பூகமுங் கதலியும் நெருங்கும்' எனவும் அருளிச் செய்ததனையும்; சுந்தர மூர்த்தி சுவாமிகள், 'தெங்கம் பொழில் சூழ் மாவின் கனி தூங்கும் பொழில்' களையும்; பாலாவி, வங்கம், கழி, ஆகிய நீர்ப்பரப்புகளையுங் கூடப் பாடுமளவில் இயற்கையெழில்களைக் குறித்தருளியிருப்பதையும் காணுங்கால் ஈழத்தின் எழில் நலங்கள் தொன்று தொட்டவையெனத் துணியலாம்.

மேலும், சேக்கிழார் பெருமான், சமய குரவர், இராமேச்சுரத்திலிருந்துகொண்டே ஈழநாட்டுத் தலங்களைப் பாடியதாகக் கூறி யிருப்பினும், திருப்பதிகங்களில் பல இயற்கை வளங்களும் உள்ளவாறே கூறப்பட்டிருப் பதை நோக்கின், இந்நாள்போற் கட்டுப் பாடுகள் இல்லாத அந்நாளில் அவர்கள் திருச்சந்நிதிகளுக் கெழுந்தருளியே பதிகமருளி யிருக்கக் கூடுமெனவும் கருதற்கிடமுண்டு.

## நகரச்சிறப்பு:

நகரங்களும், சிற்றூர்களும், பேரூர் களும், பட்டினங்களும் செறிந்ததே நாடு. ஓர் நாட்டின் வளமெல்லாம் அதன் ஊர் களைப் பொறுத்ததே. நற்பண்புள்ள மக்கள் ஒருங்கு கூடிப் பற்பல துறைகளிலும் நாட் டின் மேம்பாட்டுக்கு- மக்கள் மேம்பாட்டுக்கு ஆக்கந்தந்த வரலாறுகள் பல. 'உலகெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே' என்றெழுந்த இலக்கண (தொல்காப்பியர்) காலத்திற்கு முன்பே 'ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழும் ஊரே' என்ற பிசிராந்தையார் வாக்கிற்கிணங்கத் தக் காரைக் கொண்டிலங்கிய ஊர்கள் மலிந் திருந்தன.

யாழோர்-பாணர்- நிரம்ப வாழ்ந்திருந் தமையாலோ, தேவசாதியினராகிய யாழோர் (கந்திருவர்) விரும்பிய இடமா யிருந்ததாலோ, யாழ் வல்லானைப் இசை வாது செய்த இராவணன் வாதிட்ட இட மாதல் காரணத்தாலோ யாழ்ப்பாணம் இலங்கைத் தீவினுள் சிறந்த நகரமாய்த் திகழ்வது.

ஈழநாட்டின் வடகோடியிலே, தீவெனக் குறிக்கொள்ளும் நிலையிலே கடலால் பெரும் பகுதியும் சூழப்பெற்று விளங்குவது யாழ்ப் பாணம். அங்கே சிறப்புற்று விளங்கும் நகர், தெல்லிப்பழை. இஞ்ஞான்று, 'தெல்லிப் பள்ளை' என வழங்கப் பெறுகிறது.

## யாழ்ப்பாணம்:

'லெமூரியா' எனக் கடல் கொண்ட பரந்த நிலப்பரப்பினுக்குப் பௌதிக நூலார் பெயரிட்டனர். மனிதன் தோன்றிய இடம் அதுவேயாதல் கூடுமெனவும், முதன் முதலில் அவன் பேசிய மொழி தமிழேயாதல் வேண்டு மெனவும் சிறக்கக் கருதத் தகும் இடத்திலே தான் யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. அதன் பெயரில் 'யாழ்' என்னும் பண்டை இசைக்கருவியின் பெயரும் இருத்தலாலும், அந்நகர்க்கு வேறொரு பெயர் வழங்கிய சான்று இன்மையாலும் தமிழினத்தார் இசை வல்லாராய் ஆண்டு வாழ்ந்திருந்தமை தெளியப் பெறும். முத்தமிழும் தழைத் தோங்கியிருந்த நிலப்பரப்பிலே இசைத்தமிழ் வல்லார் இணைந்து வாழ்ந்திருந்த பல இடங் களுட் சிறப்புற்றிருந்த இடமே யாழ்ப் பாணம் எனக் கருதுவதில் தவறு ஏது?

இசைவல்லார், பல நூற்கல்வியும், நாடு பல திரிந்து பற்றிய நயத்தக்க நாகரிக வாழ் வினை மேற்கொண்டவராகவே இருந்தனரா தல்வேண்டும்.

தொன்று தொட்ட வளமும், பண்பாடு சான்ற மக்களும் இலங்கும் யாழ்ப்பாணத் துத் தெல்லிப்பழை கொண்டுள்ள பிரிவு களிலே உழவுத் தொழிலைக் கைக்கொண்ட வரும், உயர்புகழுக்கு வித்துமாய கொடைப் பண்புடையவரும் செறிந்திலங்கும் உழு கொடைப்பதி வவுணவத்தையிலே சைவ மரபிலே வந்த பெரியார் கதிர்காமர்.

கதிர்காமர், இருபாலும் சிறந்த சைவக் குடியில் தோன்றியவர். இளமையிற் கற்பன கற்றும் கேட்பன கேட்டும் 'உடம்பினைப் பெற்ற பயனவை தெல்லாம், உடம்பினுள் உத்தமனைக் காண்' எனும் சைவ நன்னெறி பற்றியே ஒழுகினர். 'வாலறிவன் நற்றாள் தொழாஅர், கற்றதனால் ஆய பயன்' எனும் மிக உயர்ந்த குறிக்கோள் கொண்டவரானார். பற்றற்றான் பற்றினையே பற்றிநிற்க மேலாய நெறி ஒன்று கடைப்பிடிக்கப்பெற்று வரு கிறது. அதுவே தலயாத்திரை. தலயாத்திரை மேற்கொள்வார் அடையும் நலங்கள் அளப் பில. சகிப்புத்தன்மை, உறுதிகுலையாமை, ஆன்றோர் இணக்கம், அயலிலே பாயாத குவிந்தமனம், (அன்பும் அருளும் நிரம்பும் ஆன்ற மனம், பிறர்க்கு உதவி முதலாம் சிலவற்றைக் குறிப்பிடலாம். சிறப்பாக 'ஆரா இயற்கை அவா' நீத்து வாழ வழி கிடைக்கிறது.

மன்னர் மன்னனின் மகன்; மாநில ஆட்சியுரிமையைப் பிறப்பாலும் சிறப்பாலும் பெற்றவன்; ஏழிரண்டாண்டு காடு வாழ்க்கை நேர்ந்தபோது, தந்தையே கூற வில்லை யென்றறிந்தபோதும், அட்டியின்றி உடனே புறப்பட்டது ஏன்? தந்தையின் உறுதியை நிறைவேற்ற என்னும் காரணத்தினும், புண்ணியத் துறைகள் ஆடலும், பொற்பு நிறைந்தோரைக் கண்டு தொழலுமே சிறப்புக் காரணங்களாம் என்பதனை இராமகாதை வாயிலாய் நாம் அறிகின்றோமே.

இந்த உயர் கருத்தமைவுகளெல்லாம் இந்நாள் தீர்த்த-தல யாத்திரைகளால் நிறைவேற இடமில்லாமையும், தம் பொருட் செலவினுலேயே யாத்திரை மேற்கொள்வதால், தானென்னும் முனைப்பு மேலோங்க, அதனை அடிப்படையாகக் கொண்டு வேண்டாத தீயபண்புகள் எங்ஙனமேனும் பற்றி விடக் காரணமாதலும் பிறவும் எண்ணி மனம் மாழ்க நேருகிறது. வறுமையுள்ளார், சிவபுண்ணிய ஈட்டங் காரணமாக யாத்திரை மேற்கொளினும் அளவிட இயலாத துன்பங்களுக்காளாக நேர்வதை யாரே அறியார்?

நாம் செய்த நற் செயலும், தன்னலம் நாடாத தகைமையுமே கதிர்காமரை அந்த நாளிலேயே தல-தீர்த்தயாத்திரைக்கு ஊக்கி விட்டன. புறப்பட்டார். ஈழத்தாயின் கொடுமுடியினின்று இந்தியத்தாயின் திருவடிகளை யணமினுர். ஆம்! கன்னித்தெய்வம் கவினும் தென்முனையை யடைந்தார்.

வங்கம் (கடலல்ல, நாடு) எங்கே? அங்கே தோன்றி, அன்னையை ஊனக்கண்ணுல் நேரிற்கண்டு அளவளாவிய பெருந்தகை-இராமகிருஷ்ணரால் ஆட்கொள்ளப்பெற்றும், அமெரிக்கா செல்ல வேண்டிய சூழ்நிலையிலே, நரேந்திரராம் விவேகாநந்தர் திருவருள் முதிர்ச்சிக்குத் தவங்கிடந்த தாய இடமன்றோ குமரிமுனை? அக்குமரியின் திருக்கடைக் கண்ணேக்கு, நம் கதிர்காமருக்கு ஊக்க மிகுதியினை அளித்தது. ஆக்கமும் உடலுறுதியும் அன்னையின் அருட் கண்ணேக்கினுக்கு இலக்கானவர்கட்கு அமைவதற்குத் தடை ஏது?

அருளாளர்களாம் சமய குரவர்கள் அண்ணல் அறுமுகனின் திருவடிப்போது சூடப்பெற்றும், அவனது உபதேசப்பேறும் பெற்ற அருணகிரி நாதர் ஆதியோராற் பாடப்பெற்ற திருகோணமலை முதலாம் ஐந்து ஈசுவரங்களையும் கதிர்காமச் செவ்வேளையும் தரிசித்த கதிர்காமர், அவர்கள் திருவடி தோயப் பெற்றனவும், அப்பரடிகளின் உழவாரத் திண்படை சாயப் பெற்றனவுமாம் திருத்தலங்களைத் தொழுதார். அழுது ஆடிப் பாடினர். திரு அங்க மாலையில் திருநாவுக்கரசர் கூறியவாறு அவயவங்களாற் பெற்ற பயனனைத்தையும் சிறுகச் சிறுகச் சேமிப்பாராய் வழிக்கொண்டு வடக்கு நோக்கினர். ஐம்பூதத் தலங்களையும், அஷ்ட வீரட்டத் தலங்களையும், சத்த விடங்கத் தலங்களையும் கண்டு, '..........பூவில் நாற்றம் போன்று உயர்ந்து, எங்கும் ஒழிவற நிறைந்து மேவிய பெருமையை' 'ஆண்டாண்டு உறைதலும் அறிந்து,' ஊனக்கண்ணுற் கண்டு உள்ளொளி பெருக்கிக் கொண்டே சென்றார்.

நாயன்மார் திருவருட் செயல்கள் நிகழ்ந்தனவாய் உள்ளத்தினைப் பெரிதும் உருக்கும் திருத்தலங்களிலே அவ்வருட் செயல்களை—இறையருள் திறங்களை உள்ளுதோறு ஊன் உருகுதல் இயல்பே. இவ்வாறுக ஊன் உருக உன்னி உன்னி, தீர்த்த யாத்திரை—தலயாத்திரையை மேற்கொண்ட கதிர்காமரை இறைவன் எந்தவேளையிலும் சிறப்புறக் கண்காணித்து, அவருக்குக் குறையோ தீங்கோ நேராவண்ணம் திருவுளங் கொண்டான் என்பதை,

'பன்னில் ஊறும் பழத்தினில் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே கனிதரும்
உன்னில் உன்னும் உணுவிடில் விட்டிடும்
என்னுள் ஈசன் இருந்த இயற்கையே'

என்ற அருள் வாக்கினுல் உறுதிகொள்ளலாம்.

(இப்பாடல் இன்றுவரை அச்சுப்படிகளில் வெளியாகவில்லை. எந் நாட்கண்ணியில் தாயுமானவர்,

'உன்னில் உன்னுமென்ற
உறுமொழியால் என் இதயம்
தன்னிலுன்னி நன்னெறியைச்
சாருநாளெந்நாளோ'

என்று அருளிய திருவாக்கிலும், இருபா இருபஃது என்ற சாத்திர நூலில் அருணந்தி சிவாச்சாரியார்.

'...... எண்டிசை விளங்க,
உன்னில் உன்னி உறுவிடற் பெயர்
குவை'

எனக் கூறுவதோடு, அதற்கு உரை எழுதிய நமச்சிவாயத் தம்பிரான், இப் பாடல் முழுவதையும் எடுத்துக்காட்டி தேவாரம் எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள்).

கதிர்காமர், இறைவன் திருவருளிலே தோய்ந்து தலம்பல கண்டு தொழுது, முத்தித் தலங்களுள் முதன்மைவாய்ந்த காசிப் பதியை அடைந்தார்.

ஈமப் புறங்காட்டு எரியாடல் உகந்து நம் அன்னை கங்காதேவியைத் தாங்கி எப்பாலவரும் தொட்டு வணங்கலும் தலை தாழ்த்தித் தம் தலைமீது குடிகொள்ளலும் இயலுமாறு எளியாராய்க் குழைந்து எழுந்தருளும் விசுவாதீதனும், விசுவஸேவ்யனுமாய் விசுவநாதப் பெயருடன் எழுந்தருளும் எந்தையைப் பணிந்தார். பணிந்த அக்கணமே பிறவி யொழிக்கும் திறம் அமைந்த சத்திநிபாதம் அவருக்கு வாய்ப்பதாயிற்று.

ஸ்ரீ காசிப்பதியில், **மணிகர்ணிகா** பீடமாய் எழுந்தருளி அருள்பாலிக்கும் விசுவேசுவரியை இடையறாப் பேரன்பால் தொழுதார். பாரதத்திலே உள்ள சக்தி பீடங்கள் பலவற்றை முன்னரே தொழுதிருந்தமையால், மேலும் உள்ள பீடங்களைத் தொழும் விருப்பினராய் அறுபத்து நான்கு சக்தி பீடங்களையும் தொழுது அன்னையின் பரிபூரண திருவருளுக்குப் பாத்திரராகி மீண்டும் ஸ்ரீ காசியை அடைந்தார். இப்போது அவர் தீவிரமான சக்தி உபாஸகர். 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' யது உபாஸனை. இந்த நிலையிலேதான் ஸ்ரீகாசி – சொர்ப்பனேசுவரி பீடம் அவரை ஈர்த்தது.

## குரு உபதேசம் :

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்னும் பெருமொழி நம் கதிர்காமரிடத்திலே நன்கு விளைவினைத் தந்தது. உணர்ச்சி மட்டுமே சாலாது; அவ்வுணர்ச்சியின் அடிப்படையிலே, முன்னே நினைவு கொள்ளப்பெற்ற சான்றாண்மைக் குணங்களோடு உபவாஸ முதலிய அருங்கொள்கைகளால், பெற்ற உபதேசம் நற்பயன் பயக்கும். குறிப்பிட்ட சாதகன், அவ்வுபதேசத்தினைத் தன் ஆன்ம விடுதலைக்காகப் பயன்படுத்திக்கொள்வதோடு தற்சூழ்ந்தார்க்கும் பயன்படச் செய்வது, அவருடைய அருள்காரணமாகவே. அந்தத் திருவுடையார் முன் செய் நல்வினையீட்டத்தினாலே சத்திநிபாதம் பெற்றவராகிவிட்டபோது, இறைவனின் சாந்நித்தியம், அவர் வாயிலாக—அவர் அறிமுகப்படுத்திய பொருள்கள் வாயிலாக ஆங்கு தரிசித்து மன ஒருமைப்பாடுகொள்ளும் யாவர்க்கும் உய்தியை நல்குகிறது. இனி அதிதீவிர சத்திநிபாதமுடையோர், தம் உள்ளத்தில் இருத்திய உபாசனா மூர்த்தியின் கருணை கடாக்ஷத்தால் எந்த இடத்தில் – எந்த நிலையில் இருந்தாலும் ஆன்ம ஞானம் பெற்றுத் திருவருளுக்கு இலக்காகி, வையத்துள் வாழினும் வானுறையும் தெய்வமாகிறார்கள்.

நம் கதிர்காமரும் அத்தகைய தெய்வமாகவே விளங்கியவர். மேற்கூறிய சித்தாந்தக் கருத்துக்களைச் சற்றே அறிந்துகொள்வோமாயின் இம்முடிவு பொருந்துமாற்றை உறுதிகொள்ளலாம். **இருவினையொப்பாவது,** நன்மையும் தீமையும் கலந்து அனுபவிக்கும் நாம், நன்மைக்கு மகிழ்தலும், தீமைக்கு வருந்துதலும் இயல்பு. இவ்வியல்பினின்று வேறுபடுவார் எவரேனும் உளராயின் அவர் முன்செய் தவப்பேறு பெற்றவரென அறிதல் வேண்டும். விளைவுகள்யாவும் முன் வினைகளின் காரணமே யென உணர்ந்தவர், இன்பம் வந்துற்றகாலை மகிழ்தலும், துன்பம் வந்துற்றகாலை, வருந்துதலும் இலராய் இரண்டையும் ஒத்த தன்மையினவாய்த் துய்ப்பர். இதனையே,

'நன்றாங்கால் நல்லவாக் காண்பவர்
அன்றாங்கால்
அல்லற் படுவதெவன் ?'

என்னும் திருவள்ளுவமும்,

'நன்றே செய்வாய் பிழை செய்வாய் - நானோ இதற்கு நாயகமே' என்னும் மணிவாசகமும் மன்பதைகட்குத் தெளிய உணர்த்துகின்றன.

மலபரிபாகமாவது, பெத்த மலம் என்னும் ஆணவ மலமானது இயல்பாகவே உயிரோடு இணைந்திருப்பது. செம்பிற் களிம்பும், இரும்பிற்குத் துருவும்போல நீக்கினும் மீளவும் பொருந்தும் இயல்பினது. அது அழிவேயில்லாதது. ஆனால் அடங்கும் தன்மை படைத்தது. அதனை அடக்குதல் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய நம்மால் இயலாது. முற்றறிவும் முற்றுத் தொழிலுமுடைய இறைவனால்தான் அதனை அடக்க முடியும். அது அடங்கி முயலகனைத் திருவடியின்கீழ் நிற்றலை நடராஜத் திருவுருவத்திலே காணலாம். அதன் ஆற்றல் அடங்கி விட்டால் உயிர் இறைவனை யடைதலில் தடையில்லை. வறுத்த விதை செயற்படுமோ? சத்திநிபாதம் என்பது, இருவினை யொப்புணர்ச்சி பெற்ற ஆன்மாவின் பெத்தமலம், இறை நினைப்பால் தன்செயல் ஒடுங்கிநிற்கும் நிலையிலே, அருட்சத்தியின் பதிவு. திருவருளின் கண்ணோக்குக்கு இலக்காகிவிட்ட ஆன்மா, சத்திநிபாதம், ஆன்மாவின் வேட்கை - விருப்பங்கட்குத் தக்கவாறு பயன் விளைக்கும். வாழைத்தண்டில் தீப்பற்றுவது போன்ற நிலை மந்ததரம் எனவும், ஈரவிறகில் தீப்பற்றல் போன்ற நிலை 'மந்தம்' எனவும், உலர்ந்த விறகில் தீப்பற்றுதல்போல்வது 'தீவிரம்' எனவும், கற்பூரத்தில் தீப்பற்றுதல் போல்வது தீவிரதரம் எனவும் சத்திநிபாதம் நால்வகை நிலைகளையுடையது.

பற்று அற்றான் பற்றன்றிப் பிறபற்று ஏதுமின்றி, 'நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்' என்றாற்போல, இடையிலே ஏற்படும் பல துன்ப-இன்பங்களிலே நாட்டமின்றி, 'மலங்கழீஇ, அன்பரொடு மரீஇ' இறை தலங்களையும் சக்தி பீடங்களையும் கண்டு, இறைக் காட்சியை மனத்திலே நிலையாக நிறுத்திய கதிர்காமர், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவரே.

மன்னவன் மகன் - ஒரேமகன். தந்தை வேட்டை மேற்கொண்டு காடு செல்லுங்கால் உடன் சென்ற ஐந்து வயதளவினனாகிய பிள்ளை, தவறிப்போய்க் காடுறை வேடரிடத்தே சிக்கிவிட்டான். அவர்கள் உண்மையறியாது, தம்மரபுக்கேற்ப வளர்க்க வளர்ந்தான். பல ஆண்டுகள் கடந்த பின்னர், தந்தை - மன்னவன் - காடு செல்ல நேர்ந்தபோது வளர்ந்த அந்தப் பிள்ளையைச் சில அடையாளங்களாற் கண்டுகொண்டான். அவனுக்கு உண்மையை யறிவித்துத் தலைநகருக்கு அழைத்துவந்தான். தன் அரசுரிமை முதலிய அளித்து முடிசூட்டினான். இந்தச் செயல்போல, ஐம்புல வேடரிடம் சிக்கி உழலும் ஆன்மா மயங்கிக் கிடத்தலை யறிந்த பரமதந்தை குருவாகிவந்து உபதேச முகத்தால் உண்மையறிவித்துத் தன்னோடு கூட்டிக்கொள்ளல், ஆன்மாவின் முற்ற முடிந்த நிலை. இதனைச் சித்தாந்த சாத்திர எட்டாம் சூத்திரம் தெளிவாகக் கூறும்.

நம் கதிர்காமர், உண்மை நிலை உணர்ந்து, தல-தீர்த்த யாத்திரைகளால் தன்னை இன்னாரென உணர்ந்த காலத்திலே குரு உபதேசம், ஸ்ரீ காசி சொர்ப்பனாதேவி பீடத்திலே கிடைத்தது. அந்த உபதேசத்தால் உபவாஸம் - பூஜை முதலியவை சிறந்தோங்கியது. நாள்தோறும் நியமந்தவிராதவராய் மீண்டவர், ஆங்காங்கு, தன் கங்கா - துர்க்கா தீர்த்த கெண்டியையே இறைவியாகத் தொழுது பூசித்து வந்தார். வந்தவர் துவாத சாந்தத் தலமாகிய மதுரையம்பதியை அடைந்தார்.

'அப்பாலுக்கு அப்பாலாய்ப் பொருஇகந்த உயிர்கள்தோறும் புணராது புணர்ந்து அருளே பொழிந்து' நிற்கும் தந்தை - தாய் இவ்வுலகுக்கு வந்து ஆட்சி செலுத்தி அன்பின் ஐந்திணையினை மக்களுக்கருளிய தலமன்றோ மதுரை.

கன்னியாக அங்கயற்கண்ணி அனைத்துலகையும் வென்று பாண்டிய குமாரியாக ஆட்சியை நடத்தி, இறைவனை மணந்தபின் அவனுக்கே தன் அரசையளித்த மதுரையம்பதி தொன்றுதொட்டே சக்தி பீடமாயமைந்த சிறப்பினையுடையதாதலால் அங்கே பல நாள் தங்கித் தான் மேற்கொண்ட துர்க்கா பூஜையை வழுவாது செய்துவந்த கதிர்காமர், தெய்விகம் நிரம்பப்பெற்றார்.

மதுரைக்குத் தெற்கிலுள்ள தல தரிசனஞ் செய்துகொண்டே சேதுக் கரையையடைந்து, படகு வழியாகக் கடலைக் கடந்து கீரிமலையை அடைந்தார்,

இந்நாள்போல 350 ஆண்டுகட்கு முன் பயண வசதிகள் உண்டா? பல்லக்கு பணக்காரரும் சந்நிதானங்களும் பயன்படுத்துவன; குதிரை, யானை, தேர் முதலியன மன்னரும் அவரது அலுவலரும் பயன்படுத்துவன; வணிகர், பொதிமாடு முதலியவற்றைப் பயன்படுத்த, உழவர் சகடைகளைப் பயன்படுத்தலே பெருவழக்கு.

வழிச்செல்வோர் துன்புறுவண்ணம், சாலையோரங்களில் மரங்களை வளர்த்தலும், 'காவளர்த்தும் குளம் தொட்டும்,' சுமைதாங்கி, ஆவுரிஞ்சு தரி முதலிய நாட்டலும் இல்லறத்தார் வழித்தடங்களில் மேற்கொள்வன. இல்லத்திலே விருந்தயர்ந்து – 'வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து, அவர் திருந்து முகம்' கண்டு மனநிறைவும் சிவபுண்ணியமும் பெறுவது 'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்தி'ருக்கும் வள்ளன்மையுடையோர் இயல்பு. செல்வர் சிலர் ஆங்காங்கு அறச்சாலைகளை அமைத்து முகங்கோணுமல் வழிக்கொள்வோரை அருத்தி உபசரிப்போரை அமர்த்திப் புண்ணியம் தேடிக் கொண்டனர். சிவனடியாரை அருத்தியல்லது உணவு கொள்ளா உறுதிகொண்ட சிறுத்தொண்டர் போன்ற அரசு அலுவலர்களும் அறம் பேணிய காரணத்தால், சமய உணர்வு, மனஅடக்க முதலிய உடைய ஆன்றோர் ஆன்மலாபப் பேறுபெற, அவர்களை உபசரித்த இல்லறத்தார்க்கும் நற்கதி கிடைத்தமை திருத்தொண்டர் புராண முதலாம் வரலாற்று ஆதாரமுள்ள நூல்களால் துணியத்தகும்.

மக்கள் அன்பும் அருளும் பெற வழியெல்லாம் அந்நாள் மேற்கொள்ளப்பெற்றதாலேயே 'அருளிலார்க்கு அவ்வுலக மில்லை' என்ற பொய்யா மொழி எழுந்தது.

அறஞ் செய்வோரது அன்பு முதலிய கண்ட போலி (வழிப்போக்கராம்) துறவிகளும் நன்னெறிக்கண் சென்ற வரலாறும் உண்டென்பதற்கு மேல், இவ் விரிவினுக்கு ஈண்டு இடனின்று.

நம் கதிர்காமர், கீரிமலையினின்று நடைகொண்டார். சற்றேறக்குறைய 3 மைல் தொலைவு வந்தார். திருவருள் அவரது நடையில் தளர்வைத் தோற்றுவித்தது. ஆயிரக் கணக்கான மைல் தொலைவெல்லாம் நடைகொண்ட நம் பெருந்தகையின் ஆற்றலிலே அடங்கிக் கிடக்கும் அம்மை, ஆண்டிருந்து கொண்டு அனைவர்க்கும் திருவருள் பாலிக்கும் திருக்கருணை கொண்டாள். நடைதளர, உடல் தளர ஆண்டிருந்த இருப்பைத் தோப்பிலே இளைப்பாறினர். திருவருட் கருணையால் அவர்முன் ஒரு சோதி தோன்றி, அவர் கொண்டுவந்த துர்க்கா சக்கரத்தை ஆங்கே தாபிக்குமாறு ஆணையிட்டது. அவ்வாணையைச் சிரமேல்தாங்கி, மரத்தடியிலேயே சக்கரத்தை அமைத்து வழிபடத் தொடங்கினர். வழிநடந்தநாள் வழிபாட்டின்போது என்னென்ன அற்புதங்கள் நிகழ்ந்தனவோ! அவர் அறிந்திருப்பினும், பிறரறிய அறிவித்தாரலலர்போலும்! தற்புகழ்சி அகந்தை (ஆணவமலம்) கொள்ள இடமாமென அறிவியாதிருந்திருக்கலாம். ஆயின், தெல்லிப்பளை– இருப்பைத் தோப்பிலே நாக சர்ப்பங்கள் வருவதுண்டு. அவை பூசை முடிந்தவுடன் மறைந்துவிடும். வெளிப்படத் தோன்றுங் காலங்களிலும் பிறகாலங்களிலும் யாரையும் அச்சமுறும் அளவிற்குங்கூட அந் நாகங்கள் நடந்து கொண்டதில்லை. பூசை காலத்திலே குருக்கள் பாம்புகட்குப் பாலும், பழமும் வைத்து வழிபடலும், அவை அவற்றை உள்கொள்ளலும் உண்டு.

கதிர்காமர், தன் உடல் கொண்டு பெற்ற தெய்வச் சால்புகளைக் கண்டோரும், கேட்டோரும் பயனுறுமாறு அந்த இருப்பைத் தோப்பிலே தெய்வ சாந்நித்தியத்தை உண்டாக்கி விட்டார். நீண்ட நெடுந்தொலைவு, நீண்ட நாட்களாகப் போற்றி வழிபாடு செய்த சக்கரமும் தீர்த்தகெண்டியுமே அங்கு வழிபடும் திருவுருவங்களாயின. அந்தப் பேரருட்பொருள்களை அவை உள்ள சுற்றுச் சார்பெல்லாம் தெய்வமணங் கமழவும்

நேரில் வந்து வழிபட்டோரே யன்றிக் கேள்வியாலறிந்து உள்ளத்தால் உன்னி வழிபட்டோரையும், அங்கண் தொண்டு பூண்டோரையும் நல்லாறு உய்த்து நலங்கள் பல்கிப் பெருகக் காண்கிறோமெனவே, கதிர்காமரது ஆன்ம ஒளி இத்தனை காலங்கடந்தும் விளக்கமுற்று நன்மை செய்தற்கு அவருடைய உழைப்புத்தான் எவ்வளவு இருக்குமெனவும் எண்ணி அவர் திருவடிகட்கு வணக்கம் செலுத்துவோமாக.

தனக்கு இயலுமளவும் பூஜை மேற்கொண்டு வந்த கதிர்காமர் சற்றே வயது முதிர்ச்சியால் தளர்வுற்றார். அந்நாளில், அவருக்குக் 'காஞ்சியிலிருந்து அந்தணர் ஒருவர் வருவார்' என்னுங் குறிப்புப் புலப்பட்டது. அவ்வாறே ஒரு அந்தணர் வந்தார். தனக்கு விளைந்த குறிப்பின் வண்ணம் பூஜையை அவரிடம் ஒப்புவித்தார் கதிர்காமர். சில காலம் அந்தணர் பூஜையைத் தரிசனம் செய்துகொண்டிருந்துவிட்டு ஜீவ சமாதியடைந்தார்.

இந்துக்கள் சைவசமயத்தைப் பின்பற்றும் நெறியாளராயிருந்தன ரென்பது மொஹெஞ்சோதரோ, அரப்பா முதலான இடங்களின் அகழ்வாராய்ச்சிகளால் தெளிவுறுகின்றன. எகிப்து முதலாய பற்பல நாடுகளின் அகழ்வாராய்ச்சி முதலியவற்றிலிருந்து உலகமுழுதுமே சிவபெருமானைத் தெய்வமாகக் கொண்டு தொழுதமை புலப்படுகின்றது. மொழி, பண்பாடு முதலியவற்றின் வேறுபாட்டால் பிற கடவுளர் எனக் கொள்ளும் வழக்கமும் வழிபாடுகளும் முறைகளும் தோன்றியதால், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று உணர்த்தவேண்டிய இன்றியமையாமை எழுந்தது. சைவம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சாக்தம், ஸௌரம் என ஆறு சமயங்களாய் விரிந்தபோது கொள்கைகள் மக்களிடையே வேறுபாட்டினை உண்டாக்கின. பின்னாட்களிலே, 'யாதொரு தெய்வங் கொண்டீர், அத்தெய்வ மாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்' என்ற சமரச மனப்பான்மை கொள்ள வைக்கவேண்டிய நியதியும் புகுந்தது. உணவு ஒன்றே யெனினும் அவரவருடைய சுவை முதலாயவற்றிற் கேற்றவாறு வெவ்வேறு வகை, சுவையினவாய்த் தயாரித்துக் கொள்ளுமாறு போல, மேற்கூறிய அறு வகைச் சமய வழிபாடும் நூல்களில் இடம் பெற்றன. கடைப்பிடிப்பவரும் அவரவர் விருப்பத்திற்கேற்பக் கைக்கொண்டனர். இந்த நிலையிலே, பற்பல ஒழுங்கு நியதிகளுடன் சாக்த வழிபாடு கைக்கொள்ளப் பெற்றது.

நீரின் தண்மையும், நெருப்பிற் சூடும் ஒன்றையொன்று பிரிக்க இயலாத நிலையினை ஆதல்போலச் சக்தியும் சிவனும் ஒருவரினொருவர் பிரியா அபேத உருவினர் என்பதறிவித்தற்கே, உருவ வழிபாட்டிலே சிவனின் இடப்பாகத்திற் பார்வதியையும், விஷ்ணுவின் திருமார்பிலே லக்ஷ்மியையும், பிரமனின் நாவிலே சரஸ்வதியிருப்பதாகவும் காண்பித்த ஆன்றோர் நெறி கூர்ந்து கவனிக்க வேண்டுவதொன்று.

சாக்தர்(சக்தி வழிபாட்டினை மேற்கொள்வோர், பெரும்பாலும் திருவுருவத்தைப் பூசிப்பது கிடையாது.) பீஜாக்ஷரங்களிலே அவள் திருவுருவத்தை ஆரோபித்து சக்கரத்தில் அவ்வக்ஷரங்களை வரித்து அதனையே அர்ச்சனை ஆராதனைகள் செய்து பூஜிப்பது மரபு. இங்ஙனமாகத் தென்னிந்தியாவிலே பல கோயில்களிலும் இன்றும் வழிபாடு நடைபெறுகிறது. ஸ்ரீகாசி, அன்னபூர்ணேசுவரி ஆலயத்திலே பக்தர்களே பூஜிக்க—அர்ச்சனை, நிவேதன, ஆராதனைகளுக்காக – ஒரு தாம்பாளத்திலே ஸ்ரீசக்கரத்தை அமைத்து அந்தக் கோயிலின் எந்த இடத்தில் வேண்டுமாயினும், எழுந்தருள்வித்துப் பூஜிக்கச் செய்கிறார்கள்.

எனவேதான் நம் கதிர்காமரும் அங்கிருந்து ஸ்ரீசக்கரத்தை எழுந்தருளச் செய்து வந்தார். ஸ்ரீசக்கரத்தில் ஷோடச அக்ஷரியாய் அன்னை விளங்குகிறாள். 'ஷோடசம்—பதினாறு. பீஜாக்ஷரம் ஒன்றும், அக்கினி கண்டம் அல்லது வாக்பவ கூடமாக நான்கு அக்ஷரங்களும், சூர்யகண்டம் அல்லது மத்ய கூடமாக ஐந்து அக்ஷரங்களும், சந்திர கண்டம் அல்லது சக்தி கூடமாக மூன்று அக்ஷரங்களும்)

கீழ்நோக்கிய 4 சிவ கோணங்களிலும் மேல் நோக்கிய 5 சக்தி கோணங்கொண்ட 44 கோணங்களை உடைய ஸ்ரீ சக்கரத்திலே 16 அக்ஷரங்களிலே அன்னை பராசக்தி விளங்குகிறாள். ''காசிக்ஷேத்ரம் சரீரம், த்ரிபுவன ஜநநீ வ்யாபினி ஞானகங்கா..................தேஹே ஸர்வம் மதியே யதிவாபதி புனஸ் தீர்த்தம் அன்யது கிம் அஸ்தி'' என்று ஸ்ரீகாசீ பஞ்சக ஸ்லோகத்தில் கூறுவதால், தேவீ உபாஸனையை அந்தர்முகமாகச் செய்வோர், எல்லாப் புண்ணிய தலங்களையும் தீர்த்தங்களையும் தம் சரீரத்திலேயே கண்டு விடுகிறார்கள் என்பது விளங்கும் (காசீ பஞ்சக ஸ்லோகம், ஸ்ரீசங்கரரால் இயற்றப்பெற்றது)

இதை ஆராய்ந்து பார்த்தால் நம் கதிர்காமர், அந்தர்முகதேவி உபாஸனை மேற்கொண்டு, ஸ்ரீ சக்கரபூஜை–கங்கா–துர்க்கா தீர்த்த பூஜைகளை உலகோர் உய்யவே தெல்லிப்பழையில் எழுந்தருளச் செய்தார் என்பதும், முதன் முதலில் நாம் நினைவு கூர்ந்தவாறே நன்மக்களுக்கு உறைவிடமாய்த் திகழும் தெல்லிப்பழையைத் தன் கலைகளோடு விளங்கச்செய்ய இறைவன் திருவுளங்கொண்டே இந்த இடத்தைக் குறிப்பிட்டருளினன் என்பதும் வெள்ளிடைமலை

ஏதோ சில காலம் இடையிலே சற்று விளக்கங்குன்றி யிருந்ததெனினும், இன்று, மேலும் விளக்கமுற வளர்ந்து வருவதுமட்டுமன்றி, தொழுதல், பணிகளை மேற்கொள்ளல், சிறப்பொடு பூசனை செய்வித்தல், அவற்றிற்கு வேண்டும் உபகரணங்களையும், கட்டளைகளையும் நிறுவுதல் வாயிலாக அன்னைக்கு அன்பு பூண்டோர் அடையும் நன்மைகளை எண்ணுங்கால் ஈங்கு விளங்கும் தெய்வீகத் தன்மை யாவர்க்கும் தெற்றென விளங்கும்.

*1965ஆம்* ஆண்டு ஆவணித் திங்கள் திருவோண நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டபின் இத்திருக்கோயில் வளர்ச்சி வியக்கத்தக்க வகையில் பெருகியது. இன்று (*17–4–81இல்*) மகா கும்பாபிஷேகம் மீண்டும் பெற்று ஒளிவிடும் இவ்வாலய பரிபாலனசபையும் அதன் தலைவி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஆற்றிவரும் சேவையை நாடும் ஏடும் நன்கறியுமன்றோ.

எனவே, பரோபகாரியாக அருள்ஞான வள்ளலாய்த் திகழ்ந்த திருமிகு கதிர்காமர் திருவடிகளை மீண்டும் போற்றி இவ் வரலாற்றினை நிறைவுசெய்து, தேவியின் திருவருளை, யாவர்க்கும் – எவ்விடத்தும் – எக்காலத்தும் அள்ளியளித்துப் பெருவாழ்வில் திளைத்திருக்கச் செய்யுமாறு இறைஞ்சுதும்.

ஓம் சக்தி!

ஸ்ரீ தேவி பராக்கிரமம் முதலிய நூல்கள் அம்பிகையின் வீரச் செயல்களை உணர்த்துவன:

பண்டாஸுர வதம், மகிஷாஸுரமர்த்தனம், மந்த்ரிணீதேவியைக் கொண்டு விஷங்க வதம் செய்தவள், வராஹியைக் கொண்டு விசுக்ரனை அழித்தவள் என்பன அவற்றுட் சில.

லக்ஷ்மீயாகச் செல்வந் தருபவளும், ஸரஸ்வதியாகக் கலை நலம் தருபவளும், காயத்ரீயாக த்யான நலம் புரிபவளும், துர்க்கையாக வீரபராக்ரமந் தருபவளும் அவளே. நக்கீரரும், 'வெற்றிவேல் போர்க் கொற்றவை சிறுவ!' என முருகப் பெருமானை விளிக்கிறார்.

நக்கீரர் குறிப்பதற்கொப்ப, துர்க்கா தேவியும், முருகப் பெருமானும் ஒரே போரில் அசுரரை யழித்து அமரரைக் காத்த வரலாறொன்று உண்டு. அவ்வரலாற்றினை விழாவாகக் கொண்டாடி மக்களுக்கு உணர்த்துவது தெல்லிப்பழையில் நடைபெறுகிறது. அதாவது:

பண்டு ஓர் கற்பத்திலே பிரமனும், விஷ்ணுவும் அகந்தை மேலோங்க ஒவ்வொருவரும் தந்தை – மகன் – பௌத்திரன் – பிரபௌத்திரன்–மருகன் என்னும் முறை காரணமாகப் போரிட்டனர். போர் வலிவுடையதானபோது, திருமால் கோபமேலிட்டு, வேள்வியொன்றியற்றி அத்தீயினின்று புலிமுகமுடைய ஓர் அசுரனை உண்டாக்கிப் பிரமனை அழிக்குமாறு ஏவினர். பிரமனும் ஓர் ஆபிசார ஓமம் செய்து அந்த அக்கினியிலிருந்து எருமைத் தலையுடன் கூடிய மகிஷாசுரனை உண்டாக்கித் திருமாலை அழித்து வருமாறு ஏவினர். இருவரும் போரிட்டனர். வெற்றி – தோல்வியின்றிச் சலிப்படைந்த

வேளை அசுரர் இருவரும் சமாதானமாயினர். 'மூர்க்கரை மூர்க்கர் முகப்ப'ரன்றோ? இருவரும் தவம் புரிந்தனர். உருத்திரன் அவர்கள் தவத்தினுக்கிரங்கி எதிர் தோன்றி வேண்டியவாறே வரங்கள் அளித்தார்.

மூர்க்கத்தனமும், கண்டார் அஞ்சத்தக்க தோற்றமும், மிக்க வலிமையுமுள்ள வியாக்கிராசுரன், (புலிமுக அசுரன்) அரசனாகவும், மகிஷாசுரன் அமைச்சனாகவும் மூவுலகங்களையும் வென்று அரசாள்வாராயினர். அவர்களது அரசியலில் தேவர், முனிவர்க்கெல்லாம் பெருந்துன்பம் விளைந்தன. பிரம-விஷ்ணு பதவிகளை விட்டு ஓட விரட்டப்பட்டனர்.

துன்பங் காரணமாகத் தேவர் முதலியோர் சிவபரஞ்சுடரை யடைந்து முறையிட்டு அழுது வேண்டினர். 'உயிர்களைக் காக்கும் தன்மை விட்டு, அகந்தை கொண்டதாலன்றோ துன்பம் தேடிக்கொண்டனை' எனத் திருமாலைக் கண்டித்த பரமபதி, துர்க்காதேவியையும், சுப்பிரமணியக் கடவுளையும் அனுப்பினார்.

துர்க்கைக்குத் துணையாகச் சுப்பிரமணியர் அசுரப்படைகளை அழித்தார். அதனால் கொதிப்புற்ற வியாக்கிராசுரனும், மகிஷாஸுரனும் மாயங்கொண்டு தேவர்களை வளைத்தார்கள். தேவர்கள் ஓலமிட்டு அரற்ற அன்னை துர்க்காதேவி, மகிஷாஸுரனை மாய்த்தாள். சுப்பிரமணியர் வியாக்கிராசுரனைத் தனது 'அநந்தகுணம்' என்ற வில்லில் அம்பு பொருத்தி விடுத்து அவன் தலையைக் கொய்து புறக்கடலில் வீழ்த்தித் தேவர் துன்பங்களைத் துடைத்தார்.

இந்த விழா, வாசிட்டலிங்க புராண, சுப்பிரமணிய பராக்கிரமத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது,

மக்கள் அகந்தையின்றி வாழவேண்டும்; தம்முள்ளேயே உள்ள அசுர குணங்களை மன உறுதி என்ற போரிட்டு வெல்லல் வேண்டுமென்பதற்காகவே, சோழமன்னனால் அமைக்கப்பெற்ற மாவிட்டபுரத்தினின்று முருகப் பெருமான் ஆண்டுதோறும் விஜயதசமியன்று எழுந்தருளிவந்து அம்புபோகும் விழா நடைபெறுகிறது.

முருகன் திருவடி வாழ்க.

# இராஜகோபுர தத்துவம்

**ஸ்தபதி எஸ். தேவலிங்கம் அவர்கள்**

(வளவனூர், தமிழ்நாடு.)

ஆலயத்தின் கிழக்கே பிரதான கோபுரமாக இது விளங்குகிறது. இதன் நீளம் 31 அடி, அகலம் 21 அடி, உயரம் 63 அடி என்ற கணபருமான ஆயாதிக்கு நினைத்ததை அளிக்கும் வல்லமை பொருந்தியதாகவும் வாஸ்து ஆயாதிக்கு ஐஸ்வரியத்தைத் தருவதாகவும். பஞ்ச விம்ஸத் பொருத்தங்களும் ஆயுள் இரண்டாயிரம் ஆண்டுகள் உடையதாகவும் உள்ள ஒரு அமைப்பாகும்.

இது ஐந்து நிலைகளையுடையது, இதன் முதல் நிலையை ப்ருதிவி தத்துவமாகவும், மூன்றும் நிலையை தேயு தத்துவமாகவும், நான்காம் நிலையை வாயு தத்துவமாகவும், ஐந்தாம் நிலையை ஆகாஸ தத்துவமாகவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.


இராஜகோபுரத்தின் கிழக்குப் புறத்தில் துர்க்கா சக்தி அம்ஸங்கள் பொருந்திய பிம்பங்களாகவும் மேற்கே விஷ்ணு தத்துவங்களும், வடக்கே பிரம்ம தத்துவமும், தெற்கே சிவ தத்துவமும் பொருந்திய பிம்பங்களாகவும் அமைகிறது.

ஐந்து நிலைக்கும் மீது ஒன்பது கலசங்கள் பொருத்தப்பட்டுள்ளது.

கோபுரத்தின் வட, தென் இருபுறமும் இரண்டு மகாநாசிகளும், கிழக்கு, மேற்கே இருபுறமும் இரண்டு மத்ய மகர நாசிகளும், ஐந்து நிலைகளிலும் 108 உபநாசிகளும், கோபுரம் தாங்கிகளும், அஷ்ட வசுக்களும், இந்திரன், அக்னி, எமன், நைருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்ற அஷ்டதிக் பாலகர்களும், ஐராவதம், புண்டரீகம், வாமணம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சர்வ பௌமம், சுப்ர தீகம் என்ற அஷ்டதிக் கஜங்களும், அனந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், கங்காபாலன், குளிகன் என்ற அஷ்ட நாகங்களும் அவரவர்க்கு உரிய இடங்களில் அமைத்தும் சதுர்வேத யாளங்கள், மற்றும் பத்மங்கள் வர்க்கங்கள் இவைகளும் அமைந்துள்ளன.

கருவறையில் இருக்கும் மூர்த்திக்கு போதிய சக்தியை அளிக்க ஜடிபந்தனம் செய்து யந்த்ர ஸ்தாபனம் செய்வதை சூஷ்ம மூர்த்தி என்கிறோம். இராஜகோபுரத்தை அந்த மூல யந்திரத்தில் உள்ள அக்ஷரங்களுக்குண்டான பிம்பங்கள் அமைவதால் இதை ஸ்தூலமூர்த்தி என்கிறோம். எனவே தொலைவிலிருந்தே தரிசனம் ஆகும். இக்கோபுரத்தை வணங்குதல் முன்னோர் மரபு. மற்றும் கருவறையில் அமைந்துள்ள ஜடிபந்தன, மகா யந்த்ர அக்ஷரங்கள் அதில் அடங்கியுள்ள பிம்பங்களை சக்திஸ்வரூபங்களை நாம் அணுகுவதற்கு இயலாது. அதன் அருள் ஒளியை மட்டும் நாம் அனுபவிக்க முடிகிறது. அதே நேரத்தில் இராஜகோபுரத்தின் மேலே அமைந்துள்ள மூர்த்தி, திருமேனிகள், மூல அக்ஷரங்கள் இவைகளின் நீழலின் கீழ் நாம் நுழைந்து நம்மை பவித்திரமாக்கிக் கொண்டு உள்ளே சென்று கருவறையில் உள்ள மூவரையும் யந்த்ரசக்தியையும் வணங்கும்போது அதன் சுடரொளி நம்மில் அதிகமாகவே கலந்து தெய்வ சக்தி திகழ்கிறது. இராஜ கோபுரத்தின் ஒவ்வொரு வர்க்கங்களுக்கும் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு தத்துவங்களும் சாஸ்திரங்களும் உள்ளன.

சிவபெருமானுக்கு வெண்மை நிறமும், அம்பிகைக்கு பச்சை நிறமும், முருகனுக்கு செந்நிறமும் மகாவிஷ்ணுவிற்கு நீல நிறமும், சூரியனுக்கு ரக்த வர்ணமும், அனைத்து வர்ணங்களும் கலந்த கருமை தோய்ந்த மேக வர்ணம் ஸ்ரீ கணபதிக்குமாக வர்ணங்களைப் பிரித்து இந்த இராஜகோபுரத்தை அழகு படுத்தியும் மனித வாழ்க்கையில் சத்தியத்தைக் கடைப்பிடித்து தெய்வத்திற்குச் சமமானவர்களின் உருவங்களையும் அமைத்து, வர்ணங்கள் தீட்டி அழகு படுத்தி வணங்குவது நம் முன்னோர் மரபு. இத்துணைச் சிறப்பு வாய்ந்த இராஜகோபுரம் பாபக் கருமங்கள் தீருவதற்காகவே நிர்மாணிக்கப்படுகிறது. கோயில்களில் உள்ள கோபுரங்களை விட இது உயர்ந்து இருப்பதால் இதனை இராஜ கோபுரம் என்பர். இதன் மகத்துவத்தை உன்னியே ''கோபுர தரிசனம் பாவ விமோசனம்'' என்று சொல்லிச் சொல்லிப் போற்றுகின்றனர். இதனை நிர்மாணிக்கும் புண்ணியம் அடியேனுக்குக் கிடைத்தது பூர்வ புண்ணிய பலனே என்று கூறி அமைகின்றேன்.



சிவாச்சாரியார்கள் சம்பாவனை



தமிழகத்து வேத விற்பன்னர்களைக் கௌரவித்தல்

# ஸ்ரீ சக்ர தத்வ விமர்சனம்

***ஸ்வாமி அத்வயானந்தநாத சரஸ்வதி அவர்கள்***
*(சாயாபுர சக்திபீடம், திருஈங்கோயில்)*

உலகங்களெல்லாம் உண்டாவதற்கு முன்பு கடவுள் ஒருவரே இருந்தார். வேறு ஒன்றும் இல்லாமலிருந்தது. காலங்களும், இடங்களும், பொருள்களும் இல்லை. அந்தக் கடவுள் பெயர், உருவம் முதலிய நம்மால் அறியப்படக்கூடிய தன்மைகள் ஒன்றுமில்லாதவர். கடவுள் என்பதுகூட நம்மால் கற்பிக்கப்பட்ட பெயரே ஆகும். கடவுள் 'நான் அனேகமாக ஆவேன்' என்று நினைத்தார். அதனால், காலங்களும் இடங்களும், பொருள்களும், பெயர்களும், வேதம் முதலியவைகளும் உண்டாயின. இவைகளெல்லாம் உண்மையில் கடவுளைத்தவிர வேறாக இல்லாமல் பொய்யாகவே இருக்கின்றன. ஆயினும் இவைகளைக் கொண்டுதான் நாம் கடவுளை உணரவும் அடையவும் வேண்டியிருக்கின்றது.

கடவுளை அறிந்து அடைவதற்கு நாம் குருவின் மூலம் தெரிய வேண்டியவைகளைத் தெரிந்து கொண்டு பக்தியோடு ஜபம், தவம், தியானம், பூஜை, தோத்திரம் முதலியவைகளைச் செய்யவேண்டியிருக்கின்றது.

தியானம், ஜபம், தோத்திரம் முதலியவைகளைச் செய்வதற்காகக் கடவுளுக்கு உருவம், பெயர், குணம், குறி, செயல் முதலியவைகள் வேதம், புராணம் முதலியவைகளில் கற்பிக்கப்பெற்றுள்ளன. அவைகளைக்கொண்டு நாம் ஜபம், தவம், பூஜை முதலிய வழிபாடுகளைச் செய்கின்றோம். ஜபத்திற்குரியன கடவுளின் நாமங்களாகிய மந்திரங்களாகும். தியானம், பூஜை முதலியவைகளுக்குரியன கடவுளின் உருவங்களாகும். கடவுளின் உருவங்களில் மிகச் சிறந்தவைகளாக உள்ளவை யந்திரங்கள் என்று சொல்லப்பெறும் சக்ரங்களாக இருக்கின்றன. இதனாலேயே கடவுள் பூஜைக்கு உருவச்சிலைகள் இருந்தாலும் அவற்றிற்கடியில் மந்திர—யந்திர—சக்ரங்களும் வைக்கப்பெறுகின்றன. உருவமில்லாத கடவுளுக்கு எண்ணிறந்த உருவங்கள் ஏற்பட்டுள்ளதைப்போலவே எண்ணிறந்த மந்திர—யந்திர—சக்ரங்களும் உள்ளன.

உருவங்கள், மந்திரங்கள், யந்திரங்கள் ஆகியவையெல்லாம் அவரவர்களின் குரு பரம்பரையைப் பொறுத்துப் பலவிதமாக இருக்கின்றன. இந்தக் கட்டுரையில் உள்ள ஸ்ரீ சக்ர தத்வ முறையானது லோபா முத்திரை, அகஸ்தியர் காலதாபனர்...... ராமானந்தர்...... பாஸ்வரானந்த நாதர் ஆகிய குரு பரம்பரையில் வந்துள்ள முறைப்படி எழுதப் பெறுவதால் இதற்குக் கொஞ்சம் மாறுபாடாக வேறுவகைகளில் உள்ளவைகளைக் கண்டு கலங்கவேண்டியதில்லை. அவரவர்களின் குரு பரம்பரையில் அறிந்தவைகளே அவரவர்களுக்குச் சிறந்தவைகளாக இருக்கும்.

மந்திரங்கள் நன்றாகச் செபிக்கப்படுமேயானால் அவர்களுடைய காலத்தில் அவரவர்களுக்கு வேண்டிய சித்திகளைக் கொடுக்கின்றன. யந்திர சக்ரங்களோ அவரவர்கள் ஆயுளுக்கு வெகு காலத்திற்குப் பிறகும் கூட உலகினருக்கு மிகுந்த நன்மைகளையும், சித்திகளையும் அளிப்பனவாக இருக்கின்றன. உதாரணமாக சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு ஜகத்குரு ஸ்ரீ ஆதி சங்கரரால் திருப்பதியில் ஸ்தாபிக்கப்பெற்ற தனவசிய யந்திரத்தின் மகிமையால் இன்று ஏராளமான தனம் வந்து குவிவதையும், திருவானைக்காவலில் பார்த்த மாத்திரத்திலேயே பயத்தையும், கழிச்சலையும், கலராவையும் உண்டு பண்ணக்கூடிய பயங்கரமான அகிலாண்டேச்வரியின் திருஉருவத்திற்கு ஸ்ரீச்ர ரத்ந தாடங்கங்களைக் காதுகளில் அணிவிக்கப் பெற்றுள்

ளதால், அந்த அம்பிகை மிகவும் ஸௌந்தர்ய சொரூபமாகி, இன்றும் பக்தர்கள் அனைவருக்கும் மிகுந்த நன்மைகளைக் கொடுப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

யந்திரச் சக்ரங்கள் எல்லாவற்றுள்ளும் மிகவும் சிறந்ததாயிருப்பது ஸ்ரீசக்ரம் என்னும் யந்திரமே யாகும். இந்த யந்திரத்திற்கு வேறு அடைமொழி ஒன்றும் கொடுக்காமலே சக்ரம் என்று சொன்னாலே போதும். அது இந்த யந்திரத்தையே குறிப்பதாகும். அவ்வளவு மேன்மை பெற்றது இது. சக்ரம் என்று சொன்னால் வேறு வண்டிச் சக்ரம் முதலியவற்றையும் குறிக்குமாதலால் இதை அவற்றினின்றும் வேறு பிரித்து மிக மேன்மை பொருந்திய யந்திர சக்ரம் என்று தெரிவிப்பதற்காக முன்னால் 'ஸ்ரீ' என்பதைச் சேர்த்து 'ஸ்ரீ சக்ரம்' என்றும் அல்லது பின்னால் 'ராஜம்' என்பதைச் சேர்த்து 'சக்ர ராஜம்' என்றும் சொல்லப் பெறுகின்றன.

மற்ற யந்திர சக்கரங்களெல்லாம் மந்திர எழுத்துக்கள் பொறிக்கப்படாமல் பலன் கொடுப்பதில்லை. ஆனால் இந்த ஸ்ரீ சக்கரத்திற்கு மட்டும் அதில் மந்திர எழுத்துக்கள் ஒன்றும் பொறிக்கப்படாமலே மற்ற யந்திரங்கள் எல்லாவற்றையும்விட மிகச் சிறந்த பலனைக் கொடுப்பதாக இருக்கின்றது. மந்திர அக்ஷரங்கள் எழுத வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு அதற்குத் தக்கபடி இச் சக்ரத்திலுள்ள அதிதேவதைகளைக் குறிக்கும் மந்திர எழுத்துக்களும் பலவிதமாகவும் இருக்கின்றன.

இந்த ஸ்ரீ சக்ரமானது பூப்ரஸ்தரம், கைலாச ப்ரஸ்தரம், மேரு ப்ரஸ்தரம் என்று மூன்று வகையிலுள்ளது. அதாவது வெறுந் தகடாகத் தட்டையாகவும், உயரமாகவும், அதைவிடக் கோபுரம்போல் மிக உயரமாகவும் இருப்பனவாகவும், இவைகளும் அர்த்தமேரு, பூர்ணமேரு முதலாகப் பலவிதமாகவும், ரேகைகளிலும் பாதாளரேகை, ஊர்த்வரேகை முதலாகப் பலவிதமாகவும் செய்யப்படுகின்றன. இவைகளெல்லாம் அவரவர்கள் குரு பரம்பரையில் குருமுகமாகக் கேட்டு அறியத்தக்கனவாகும்.

ஸ்ரீ சக்ரமானது அண்டங்கள், பிண்டங்கள், பிரம்மாண்டங்கள், அவற்றிலுள்ள தேவதைகள் எல்லாவற்றையும் தனக்குள் அடக்கியதாக இருக்கின்றது. இவற்றை விளக்குவதே ஸ்ரீ சக்ர தத்துவ விமர்சனம் ஆகும்.

ஸ்ரீ சக்ரத்தின் அதிதேவதை அல்லது ஸ்ரீ சக்ரத்திற்குரிய முக்கிய தேவதை பரப்பிரம்மமேயாகிய ஸ்ரீ லலிதாம்பிகை யாகும். மஹா சம்புநாதர் என்னும் நாதசிவனால் செய்யப்பெற்ற மஹாயாகத்தினின்றும் பரப்பிரம்மமே ஸ்ரீ சங்கரராஜ மேருபீட உருவத்துடன் தோன்றியது. பின்னரும் அந்த மஹா சம்புநாதர் செய்த தோத்திர தாண்டவங்களால் அந்தப் பரப்பிரம்மமே மேரு பீடத்தின் உச்சியில் பதினாறு வயதுள்ள யோகினிக் கன்னிகையான மஹாதிரிபுரசுந்தரியாகக் காட்சியளித்தது. அந்த சுந்தரி மிகுந்த லாலனமாக வீற்றிருந்ததால் லலிதா என்னும் பெயரால் தோத்திரங்கள் செய்யப்பெற்றார்.

பின்னர் அந்த மஹாயாகத்தில் மஹா சம்புநாதரால் அர்ப்பணம் செய்யப்பெற்ற சப்த சமுத்திரங்கள், தாவர வகைகள், மற்றச் சீவ வகைகள், ஈச்வர வகைகள் எல்லாவற்றையும் லலிதாம்பிகை தன்னுடைய சரீரத்தினின்றே உண்டாகும்படி செய்தார்.

லலிதாம்பிகையின் அழகைப் பார்த்து பரமானந்தமடைந்த தேவதைகளெல்லோரும் தங்களைப்போல ஸ்த்ரீ புருஷ மிதுன வடிவமாகக் காட்சி தரவேண்டும் என்று வேண்டிக்கொள்ள அதற்காக லலிதாம்பிகை, தன்னுடைய ஸத் சொரூபமே காமேச்வரர் என்னும் பெயருடைய பதினாறு வயதே உள்ள சிவன் வடிவமாகவும், சித் சொரூபமே அந்தக் காமேச்வரர் மடியில் பதினாறு வயதுடைய காமேச்வரி என்னும் சிவை வடிவமாகவும், ஆனந்த சொரூபமே ஒன்பது வயதுடைய பாலாம்பிகை என்னும் அவர்களின் புத்திரியாகவும் தோன்றும்படி காட்சியளித்தார். இப்படிப் பராபராதி ரகசிய யோகினியாராகிய லலிதாம்பிகை தான் ஒருவரேயாகவும், மூவராகவும், அவரவர்கள் விரும்புகின்றபடி காட்சி அருளு

கின்றார். இத்தகைய லலிதாம்பிகையே ஸ்ரீ சக்ரத்தின் முக்கிய தேவதையாகும்.

இவற்றின் விளக்கங்களெல்லாம் பல பெரிய நூல்களில் விளக்க வேண்டியனவாக இருக்கின்றன. ஆயினும் இங்கு மிகவும் சுருக்கமான இந்தச் சிறிய கட்டுரைக்குள் அடங்குகின்ற அளவு எழுதப் பெறுகின்றன.

ஸ்ரீ சக்ரமானது வெளியிலிருந்து உள்ளே நடுவிற்குப் போகும் முறையில் சொன்னால் (1) வட்டமாகவோ, சதுரமாகவோ, இவை இரண்டுமாகவோ வெளியில் முதலில் இருக்கும் பூபுரச் சக்ரமும், அதற்குள்ளே (2) பதினாறு பூ இதழ்களுள்ள ஸர்வாசாபரிபூரக சக்ரமும், அடுத்து (3) எட்டு பூ இதழ்களுள்ள ஸர்வஸங்க்ஷோபண சக்ரமும், அதற்குள்ளே (4) பதினான்கு முக்கோணங்களாகவுள்ள ஸர்வஸௌபாக்கிய தாயக சக்ரமும், அதற்குள் (5) பத்து முக்கோணமாகவுள்ள ஸர்வார்த்தசாதக சக்ரமும் அதற்குள்ளே (6) மீண்டும் பத்து முக்கோணமாகவுள்ள ஸர்வரக்ஷாகர சக்ரமும் அதற்கடுத்து (7) எட்டு முக்கோணமாகவுள்ள ஸர்வரோகஹர சக்ரமும், அதற்குள்ளே (8) ஒரு முக்கோணமாகவுள்ள ஸர்வஸித்திப்ரத சக்ரமும், அதற்குள்ளே நடுமத்தியில் எல்லாவற்றிற்கும் மேலான (9) வட்ட வடிவமான ஸர்வாநந்தமய சக்ரம் என்னும் பிந்து சக்ரமும் ஆக ஒன்பது சக்ரங்கள் உள்ளதாக அமைந்துள்ளது. வேறு சித்தர்களின் முறையில் பதினாறிதழ்ச் சக்ரத்திற்கு வெளியே 32 இதழ்ச் சக்ரம் இருப்பதாகவும் இருக்கின்ற முறையும் உண்டு.

இவற்றில் பூபுரச் சக்ரமாவது நமது கண்களாற் காணப்படுகின்ற பூமியையும், நமது சரீரத்தையும் குறிப்பதாக உள்ளது. இந்த உலகமானது மேல் உலகம், மத்திய உலகம், கீழ் உலகம் என்னும் மூன்று உலகமாக உள்ளபடியாலும், சரீரமானது ஸ்தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் என மூன்று சரீரமாக உள்ளபடியாலும் அவற்றைக் குறிக்கும்படி பூபுரச் சக்ரம் ஒன்றே மூன்று சக்ரமாகப் பிரித்து மூன்று படியாக அல்லது மூன்று ரேகையாகக் காண்பிக்கப் பெற்றுள்ளது.

அண்டமானது பதினாறு கோணதிசைகள் உடையதாவும், பிண்டமாகிய நமது உடம்பு இரண்டு கண்கள், இரண்டு காதுகள், மூக்கு – வாய் இரண்டு, கழுத்து-உடம்பு இரண்டு, கைகள் இரண்டு, புஜங்கள் இரண்டு, துடைகள் இரண்டு, கால்கள் இரண்டு என்னும் பதினாறு அவயவங்கள் உடையதாகவும், சந்திரன் பதினாறு கலைகள் உடையதாகவும் இருக்கின்றபடியால் அவற்றைக் குறிக்கின்ற இரண்டாவது சக்ரமானது பதினாறு இதழ்கள் உடையதாகக் காட்டப்பெற்றுள்ளது,

இந்த அண்டமானது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன் முதலாகிய ஸ்வப்பிரகாசமுடைய கிரஹங்கள், சந்திரன் முதலிய ஸ்வப்ரகாசமில்லாத கிரஹங்கள், ஜீவாத்மாக்கள் என்னும் எட்டுவகையாகவும் எட்டுத் திருக்குறளை உடையதாவும் இருக்கின்றபடியாலும், பிண்டமாகிய இந்தத் தேகமானது தலை, கழுத்து, மார்பு, வயிறு, கைகள் இரண்டு, கால்கள் இரண்டு என்னும் எட்டு அவயவங்கள் உடையதாக இருக்கின்றபடியாலும் அவற்றைக் குறிக்கும் மூன்றாவது சக்ரமானது எட்டு இதழ்களை உடையதாகக் காட்டப் பெற்றுள்ளது.

மாயா மயமாகிய பிரம்மாண்டமானது, பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், மஹர்லோகம், ஜனலோகம், தபாலோகம், ஸ்த்யலோகம் என்னும் மேல் ஏழு உலகங்களையும், அதலம், விதலம், ஸுதலம், தராதலம், மஹாதலம், ரஸாதலம், பாதாலம் என்னும் கீழ் ஏழ் உலகங்களையும் உடையதாகப் பதினான்கு புவன வடிவமாக இருப்பதனாலும், சரீரமானது ஞானேந்திரியம் ஐந்து கர்மேந்திரியம் ஐந்து அந்தக் கரணம் நான்கு ஆகிய பதினான்குக்கும் கருவிகளை உடையதாகக் காண்பிக்கப்பெற்றுள்ளது.

அண்டமானது எட்டுத் திக்குகளுடன் மேல் கீழ் என்னும் இரண்டையும் சேர்த்துப் பத்துத் திக்குகளை உடையதாகவும், விஷ்ணுவின் பத்து அவதாரங்களைக் கொண்டதாகவும் இருப்பதாலும் பிண்டமானது பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன்,

தனஞ்ஜயன் என்னும் பத்து வாயுக்களை உடையதாக இருப்பதாலும் அவற்றைக் குறிக்கும்படி ஐந்தாவது சக்ரமானது பத்து முக்கோணங்களை உடையதாகக் காட்டப் பெற்றுள்ளது.

பஞ்சபூத மயமான அண்டத்தில் நடுவிலுள்ள அக்கினியானது ஆகாசம், வாயு என்னும் முன் இரண்டு பூதங்களிலும் அப்பு பிருதிவி என்னும் பின் இரண்டு பூதங்களிலும் தனது பத்துக் கலைகளால் நிரப்பி இருப்பதால் அண்டமெங்கும் நிறைந்த அக்கினி பத்துக் கலைகளை உடையது என்பதையும், பிண்டத்திலுள்ள அக்கினியானது மனிதர்களின் தேகத்தில் புக்ஷ்யம், போஜ்யம், சோஷ்யம், லேஹ்யம், பேயம் என்னும் ஐந்துவித அன்னங்களையும், பக்குவம் செய்வதாய் ரேசகம், பூரகம், சோஷகம், தாஹகம், ப்லாவகம், க்ஷாரகம், உத்காரதம், சோபகம் மோஹகம், ஜ்ரும்பகம் என்னும் பத்துக் கலைகளை உடையதாக இருக்கின்றது என்பதையும், மனிதருக்கு ஜாக்ரம், ஸ்வப்நம், சுழுத்தி, துரீயம், துரீயாதீதம் என்னும் மேலாலவஸ்தை ஐந்து அதே பெயரை உடைய கிழாலவஸ்தை ஐந்தும் ஆக பத்து அவஸ்தைகள் உள்ளன என்பதையும் மனித சரீரத்தில் கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு,மூக்கு இரண்டு, வாய் ஒன்று, குதம், குஹ்யம் இரண்டு, நாபி ஒன்று ஆக பத்துத் துவாரங்கள் உள்ளன என்பதையும், இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரீ, ஹஸ்தி, ஜிஹ்வா, அலம்புஸா, பூஷா, குஹூசங்கினீ, ஸரஸ்வதி என்னும் பத்து நாடிகள் உள்ளன என்பதையும் குறிக்கும் பொருட்டு ஆறாவது சக்ரமானது மீண்டும் பத்து முக்கோணங்களை உடையதாகக் காண்பிக்கப் பெற்றுள்ளது.

அண்டத்தில் திக்குபாலகர் எண்மரும், நாகங்கள் எட்டும், திக்கு யானைகள் எட்டும் உள்ளன என்பதையும், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மஹேச்வரன், சதாசிவன், கலா நாதர், பிந்துநாதர், நாதசிவன் ஆகிய அஷ்ட மூர்த்திகள் உள்ளனர் என்பதையும், பிண்டமாகிய மனிதருக்கு ஐயப்படாமை, அவா இன்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, பழி நீக்கல், உறுதி நிறுத்தல், பேரன்புடைமை, அறம் விளக்கல் என்னும் அங்க தர்மம் எட்டும் அவசியம் வேண்டியனவாம் என்பதையும் விளக்கும்பொருட்டு ஏழாவது சக்ரமானது எட்டு முக்கோணங்களை உடையதாகக் காட்டப்பெற்றுள்ளது.

அண்டம், பிண்டம், பிரம்மாண்டம் ஆகிய எல்லாம் அநிர்வசநீயமான சுத்த மாயை, மிச்ரமாயை, அசுத்தமாயை என்று மூன்றுவிதமாகச் சொல்லப்பெறும். ஒரே மாயையின் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களாலேயே ஆகியுள்ளன என்பதையும் தரம்மமாகிய லலிதாம்பிகைக்கு அடுத்த படியாக உள்ள எல்லா ஈசுவரர்களும், ஈசுவரிகளும் அந்த முக்குணங்களில் பிரதிபிம்பித்துள்ள பிரதிபிம்பங்களே என்பதையும் அறிவிக்கும்பொருட்டு எட்டாவது சக்கரமானது மூன்று கோணங்களை உடைய ஒரே சக்ரமாக அமைந்துள்ளது.


லலிதாம்பிகை வடிவாகத் தோன்றிய ஸத்-சித்-ஆனந்தமே வடிவமான பிரம்மம் ஒன்றே உண்மையில் உள்ளது என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு ஒன்பதாவது சக்ரமாவது பிந்துவாகிய ஒரே வட்டமாக அமைந்துள்ளது.

மேற்சொன்ன வகையில் ஸ்ரீ சக்ரமானது மேற்சொல்லியுள்ளபடி தத்வங்கள் எல்லாவற்றையும் சுருக்கமாக விளக்குகின்றது என்று தெரிந்துகொள்ளவேண்டும்.


மேலும் இந்த சக்ர ராஜத்தில் வேத, ஆகம, புராணங்களிலெல்லாம் சொல்லப் பெறுகின்ற எல்லா சக்திகளும், ஈச்வரர்களும் இருக்கின்றார்கள். ஆதலால் இந்த ஸ்ரீ சக்ரத்தில் அவர்களெல்லோருடைய மந்திரங்களும் எழுதப்படுகின்றன என்றும் அந்த எல்லாத் தேவதைகளும் இதில் பூஜிக்கப்படுகிறார்கள் என்றும் தெரிந்துகொள்ளலாம்.

இந்தச் சக்ரத்தில் பூஜிக்கப்பெறுகின்ற தேவதைகளைப்பற்றி எல்லாம் விவரிக்கப் புகுந்தால் மிகவும் விரியும். ஆதலால் இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

அம்பிகை அருள்க!



இராஜகோபுரமமைத்த ஸ்தபதிக்கு
தங்கச் சங்கிலி அணிவித்துக் கௌரவித்தல்



மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு
ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகளின் இன்னிசை விரிவுரை

# ஸ்ரீ துர்க்கையம்மன் பிள்ளைத் தமிழ்

### காப்புப் பருவம்

வல்ல நாயகி மங்கள நாதனே
வார ணனன மூஷிக வாகனு
மன்னு மேருவில் மந்திர மாமறை
வந்து சூடிய எந்தை கணேசனே.

நல்ல காவிரி நானில மீதுற
நல்கு காக மெனப்பறந் தோடிய
நாயக சிவ ஞடிய தேர்விழா
நண்ணு மச்சிறுத் தாய்விக்கி னேஸ்வரா.

தில்லை யாரணி தேவ மனோஹரி
சித்தி ரித்துர்க்கை சேர்த்து வழங்கிய
செல்வ னேதுயர் தீர்க்கும் பராபரா
சித்த பத்திமைச் சீரடி யார்திகழ்

தெல்லி யூரினிற் சேர்ந்த வுழுகுடைத்
தேவர் சூழ்பதித் தேவிதுர்க் காம்பிகைத்
தென்னு மானந்தப் பிள்ளைத் தமிழ்சொலச்
சேவடித் துணை செய்தெமைக் காக்கவே.

### செங்கீரைப் பருவம்

பேராரு முலகங்கள் பலகோடி யாக்கியவை
பேணியுண வூட்டி என்றும்
பிரியாம லருகுதிரு விளையாடல் செய்தமரர்
பேணுபத முதவு சிவையே
நேரான வீரமுறு நெஞ்சிலே யஞ்சுகம்
நிகரமொழி பேசு முமையே
நித்திலப் புன்னகை நிலாவிஞ லன்பர்தம்
நீங்காத குறைக ளெல்லாம்
தாராள மாயரன் தன்செவி புகன்றுவரந்
தரவாங்கி யீவு முமையே
தவயோக முனிவருணர் சிவஞான வீடெல்லாம்
தவழ்ந்துநட மாடு மயிலே

சீராரும் தெல்லியூர் திகழுமுழு குடைஜனனி
செங்கீரை யாடி யருளே
திக்கற்ற வர்க்கருளும் துர்க்கையம் மாவினிய
செங்கீரை யாடி யருளே.

## தாலப் பருவம்

எங்கும் பரவி இறைவனுடன்
இயலைந் தொழில்க ளினிதாற்றி
இகமும் பரமும் இலங்குசுக
மீந்து வினைக ளீடழித்துப்
பொங்கும் வேதா கமநெறிகள்
பொலியப் பூசை புரிந்தன்பிற்
புகுந்து கழலைப் புனையடியார்,
புந்திக் கருளும் பூரணியே
சங்கம் வளர்த்த தடாதகையே
தத்வா தீதத் தனிப்பொருளே
சாத்வீ கத்திலே தளிர்த்தெழுந்த
சக்திக் கனியே சால்புநலம்
தங்கும் தெய்வத் தெல்விநகர்த்
தவமே தாலோ தாலேலோ
தளரா வாழ்வைத் தரும்துர்க்கைத்
தாயே தாலோ தாலேலோ.

நிகழும் கலையாம் பருப்பினொடு
செழித்த சுருதித் தீங்கரும்பும்
செறிதத் துவமாம் செழுந்தேனும்
திரள்முக் குணத்துத் தீஞ்சுவையே
அகநற் பகவின் அன்பென்னும்
அமுதப் பாலும் அளைந்தெடுத்த
அருமைச் சுவையே அறிவுடையார்
அருட்கண் ணுருகு மானந்தச்
சுகமே சுகத்தி லுறுவிளைவே
தோன்றும் காட்சித் தொடர்முடிவில்
துலங்கும் பக்திச் சுடரொளியே
சுரக்கும் ஞானச் சுனையேவான்
மகிழும் தருவே பவப்பிணிக்கு
மருந்தே தாலோ தாலேலோ
வளரும் தெல்லிப் பதித்துர்க்கை
மணியே தாலோ தாலேலோ.

### சப்பாணிப் பருவம்

அரிமாலு மறியாத நிறைசோதி யேகற்ற
அறிவா லறிந்து தெளியும்
அமுதமே சிவயநம வட்சரத் திருநடன
அம்பலத் தைய னுடனே
எரியாகி வளியாகிப் புனலாகி மண்விண்ணும்
எல்லாம் இயக்கி மொழியும்
எண்ணெழுத் தானகோ ணங்களி லமர்ந்தாடு
மிறைவியே இரவி மதியைச்
சரியாகப் பணிபுரிய விதிகாட்டு மரசியே
தழுவுசன் மார்க்க வுண்மை
சாற்றுமெண் ணென்கலைக ளேற்றவகை பொலிவுதரச்
சற்றுமொரு கண நேரமும்
தரியாது நடமாடு மதிகாரி யேமெல்லச்
சப்பாணி கொட்டி யருளே
தமியேன் மனங்குளிரத் தெல்லியூர்த் துர்க்கையே.
சப்பாணி கொட்டி யருளே.

### முத்தப் பருவம்

கையாற் பிசைந்து கண்துளும்பக்
கதறி நெடுங்கோ புரம்பார்த்த
காதற் குழந்தைக் காயிரங்கிக்
கனமார் முலைப்பால் கறந்தளித்த
மையார் கண்ணி மனநிலைத்து
வழுத்தும் பன்னாள் வளர்தவத்தில்
மன்னும் பார்த்தன் வரங்கொள்ள
மணவற் கின்னருள் வாய்மலரும்
கையார் வளையற் காரணியே
காய மழிந்தும் கருத்தழியாக்
கதிகாண் நாவுக் கரசற்குக்
கைலை காட்டக் கணவனுடன்
ஐயா றமர்ந்த மடப்பிடியே
அருள்வாய் முத்தம் தருகவே
அழகார் தெல்லி நகர்த்துர்க்கை
யம்மா முத்தம் தருகவே.

### வாரானைப் பருவம்

நாவி லிருந்து நடமாடும்
நாதப் பெருக்கே சகஸ்ராரா
நடுநின் றொளிரும் நாதாந்த
ஞானப் பொருப்பே வருகநமைக்

காவ லிருந்து நன்னெறியிற்
கட்டிக் கரும்புக் கட்டிதரும்
கருணை கரியே வருகதமிழ்
கவிதை நயக்கும் கந்தப்பன்
மேவ வொருங்கு விழைந்தெடுத்த
விமலி வருக சிவசமய
விளக்கே வருக மெய்த்தொண்டர்
விதியைப் புதுக்கி மேலின்பத்
தாவி யுறங்க அணைக்கும்கை
அன்பே வருக அறம்பொலிய
அமர்ந்த தெல்லி நகர்த்துர்க்கை
யாத்தாள் வருக வருகவே.

## அம்புலிப் பருவம்

வேதியர்கள் முனிவர்கள் வானவர் மதிக்கமழ
விடையவன் சென்னி பெற்றுய்
விளங்குதூ ணுகுதுணை யாற்றிணய் தமிழிலே
விருப்புடைய மூர்த்தி யானுய்
ஓதியுணர் வரியசிவ சத்தியின் பத்தருக்
குதவுபவ னீயாத லால்
உனையழைக் கின்றனம் சதுரமறை முறைமதுரை
ஓங்கமுடி கொண்ட சத்தி
மோதிவரு மவுணர்படை முடுகிப் பதைத்தழிய
முட்டித் தகர்த்த சத்தி
முச்சத்தி யாகிய பராசத்தி ஈசனின்
முன்னின் றெதிர்த் தாடிய
ஆதிசிவ சத்தியுட னுதரவு கொண்டாட
அம்புலீ யாட வாவே
அற்புதத் தெல்லீயூர்த் துர்க்கையம் பிகையுடன்
அம்புலீ யாட வாவே.

## சிறுபறைப் பருவம்

உத்தமக் கதிர்காமப் பக்தரென்னும் சுப்பையர்
ஓங்குமுந் நூற்றுண்டு முன்
உயர்காசிப் பதியிருந் துருவதிரு முகக்கெண்டி
உயர்சொப்ப னேஸ்வரி பதச்
சத்திதுர்க் காதேவி யந்திரங் கொண்டுநலந்
தருவேம்பி னிழலுமு குடைத்
தண்பதியிற் றுபித்துப் பூசித்து வருநாளில்
சாற்றுதல யாத்திரை செலும்

முத்திதரும் காஞ்சிபுர வுத்தரம்வந் தணனொருவன்
முந்துபசி தீர்ந்தித் தலம்
மொட்டரு மலர்கொண்டு நிட்டையும் பூசையும்
முட்டின்றி நின்றி யற்ற
சித்திதரும் நின்கோயில் பொங்கியதென் றுலகறியச்
சிறுபறை முழங்கியருளே
ஜெகநாத னுக்கிளைய தெல்லியூர்த் துர்க்கையே
சிறுபறை முழங்கி யருளே.

**சிற்றிற் பருவம்**

பெருமான் சுடர்வெண் பிறையாளன்
பிரியா தணைந்து களபமணம்
பெருகும் பதுமத் திருமேனி
பிறழப் புழுதி படியாதோ
வருவார் வினையை வகுத்தினிய
வரங்கள் சுரக்கும் வண்கலசம்
மண்ணிற் பட்டால் நிலைமாறி
மாண்பு நலத்திற் குறையாதோ
உருவார் மென்பூத் திருவடிகள்
உருட்டும் சிறுமண் பரல்முட்டி
உதிரம் குமுற உள்சிவந்து
ஊன மடைந்து வருந்தாவோ
திருநீ றணியத் தருபவளே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
தெல்லிப் பழையூர் ஸ்ரீதுர்க்கைத்
திருவே சிற்றில் சிதையேலே.

**சிறுதேர்ப் பருவம்**

இவராகி யவராகி ஏழ்செனனத் தாயினத்
தெண்ணிலா வுயிர்க் கொத்தினை
இட்டுருட் டும்பரற் கேற்றவல் லமையாகி
இருக்கும் மகா சத்தியே
நவகோளும் பிரமனும் நமனுமுன் னடியார்க்கு
நலமா யுருண்டு வேண்டும்
ஞானசுக மீயப் பணித்திடும் முதல்வியே
நான்கு மார்க்கத் தலைவியே
அவமான கொடுநோய்கள் அடுபேய்கள் மிடிபகைவர்
அக்கிரமம் செய்தி டாமல்
அரியேறி யகிலாண்ட கோடானு கோடிகளை
அசையவுருட் டிக்காத்து மே
சிவபோத முலகெலாம் சென்றுருண் டிடமறைச்
சிறுதே ருருட்டி யருளே
செந்தமிழ்த் தெல்லியூர் திகழ்துர்க்கை யம்மையே
சிறுதே ருருட்டி யருளே.



6

## ஸ்ரீலங்கா யாழ்ப்பாணம் — தெல்லிப்பழை

# துர்க்கையம்மன் துதி

சித்திரக்கவிஞர்

**புலவர் இல. பழநிச்சாமி அவர்கள்**

### பஞ்சரத்தினம்

திருவுற்ற யாழ்ப்பாண நகரின் மாண்பு
திகழ்தெல்லிப் பழையதனிற் கோயில் கொண்டு
உருவுற்ற கொற்றவைமா தேவி துர்க்கை
உத்தமியே வித்தகியே உலக மாதா
கருவுற்ற உயிர்த்திரள்கள் எல்லாம் உய்யக்
காப்பாற்றும் அருள்வடிவே கருணைக் கன்னி
மருவுற்ற மலர்க்களப வசந்த வல்லி
மரகதசுந் தரிதருமி அருள்வாய் நன்றே.

தருவளர்மா வாழைபலா கமுகு தென்னை
தண்பனைக்கா வணத்தெல்லிப் பழையின் செல்வி
அருள்வளரும் ஆரணிபூ ரணியே மெய்மை
அருட்சிவத்தை நீங்காத அன்பு வாழ்வே
திருமகளும் கவிமகளும் தானே யான
சிற்சக்தி கொற்றவையே குலமா தாவே
மருவளர்செங் கடம்பணிவேற் செவ்வேள் வள்ளி
மணவாளன் மாதாவே அருள்வாய் நன்றே.

திரிபுரசுந் தரிஇலங்கை யாழ்ப்பா ணத்தின்
திருவனைய மடந்தையர்நற் குமரர் சான்றோர்
விரிபுகழ்சேர் தெல்லிநகர் கோயில் கொண்ட
விமலைகா ரணிபசுந்த மின்னே பொன்னே
பரிபுரங்கொஞ் சும்கமல சரணச் செல்வி
பத்திநிறை யன்பருளக் கோயில் கொண்ட
சுரிகுழலி நாரணிமா நேமி சங்கம்
துலங்குகர தலத்தாளே அருள்வாய் நன்றே.

மலரளக வேணிமதி வதனி என்றும்
மாறுத கருணையருள் விழியி னளே
அலரவனும் திருமாலும் தானே யாகி
அரனாகி முத்தொழிலும் இயற்றும் தாயே

இலகும்அன்பர் இதயகம லத்தி ருக்கும்
எந்தாயே எனையாண்ட இனிய செல்வி
அலகில்புகழ் நிறைதெல்லிப் பழையில் வாழும்
அம்பிகைவாட் குமரிசிவை யருள்வாய் நன்றே.

இளம்பருவ முதலாக எனது ளத்தில்
இலங்கிநின்று காப்பவளே கருணை மாதா
வளம்பெறுநற் சான்றோர்கள் வாழுந் தெல்லி
மாநகரின் துர்க்கைபரா சக்தி யையை
தளவமலர் நகையாளே யழகு விஞ்சித்
தழைந்தசவுந் தரிகளப தனத்தி ஞளே
துளவமலர் முகுந்தனெம்மாற் கிளைய செல்வி
சோதிவடி வானவளே அருள்வாய் நன்றே.

### நேரிசை வெண்பா

சைவசித் தாந்த சமாசப் பவளவிழா
தெய்வ மணங்கமழும் சீர்பெற்ற — மெய்கண்ட
சாத்திர தோத்திரச் சார்புணர்ந்த யாழ்ப்பாணம்
வாய்த்த தெல்லியூரில் மகிழ்ந்து.

அம்பிகை துர்க்கை யருள்மிக்க ஆலயத்தின்
சம்பிரமம் சேர்தேவத் தானத்தார் — அம்புவியோர்
கொண்டாடச் செய்தமைத்த கொள்கைமிக நன்றுநன்றே
தண்டமிழோர் போற்றத் தழைத்து.

யாழ்ப்பாண ஆறுமுக நாவலர்கோன் சைவநெறி
வாய்ப்பாக ஓங்கிடவே மங்கையர்க்கோர் — தாய்த்திலகம்
தங்கம்அப்பாக் குட்டியம்மை சைவநெறி ஸ்ரீலங்கா
துங்கமுறச் செய்தார் சூழ்ந்து.

வாழ்க உயர்சைவம் வளர்கதமிழ் யாழ்ப்பாணம்
வாழ்கநல்லோர் வாழ்க மகிமீது — வாழ்கவென்றும்
தெல்லிப் பழைத்துர்க்கைத் தேவி யருட்கோயில்
நல்லதே வத்தானம் நன்கு.

# நன்றி நவிலல்

"என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற நிலையில் அப்பர் சுவாமிகள் துய்த்த பேரின்பத்தை யார்தான் துய்ப்பர்.

இவ்வகையில் தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலயத் திருத்தொண்டில் பங்குகொண்டார் யாவருக்கும் எமது நிர்வாகசபை அதன் உளம்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

துர்க்கை அம்பாள் ஆலய இராஜகோபுரம் பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டும், ஆலய உள் மண்டபங்கள் தூபிகள் திருத்தப்பட்டு அழகு படுத்தப்பட்டும் சிவாகம விதிப்படி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுப் பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் அம்பாளின் கடாட்சத்தைப் பெற்றுள்ளனர். இவ்வேளையில் ஆலயத் திருப்பணிகளைத் தனி உபயமாக இயற்றிய அம்பாள் அடியார்களுக்கும் பொது உபயமாக நிறைவேறிய திருப்பணிகளுக்கு நிதி உபகரித்த பல்லாயிரக்கணக்கான அன்பர்களுக்கும் நாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளோம். விசேடமாக இராஜகோபுரத் திருப்பணிக்கு உள்நாட்டுப் பக்தர்களதும் வெளிநாட்டுப் பக்தர்களதும் உபகரிப்பாகப் பல இலட்சக்கணக்கான நிதி சேர்ந்துள்ளது. துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகசபைத் தலைவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது உள்ளூர், வெளியூர் சமய சொற்பொழிவுகள் மூலம் துர்க்கையின் திருப்பணிக்கு மிகுந்த ஆதரவைத் திரட்டித் தந்துள்ளார். திருப்பணிகள் பற்றிய வரவு செலவுக் கணக்கு விவரங்கள் யாவும் வழமைபோல் ஆண்டிறுதியில் பொது மக்கள் பார்வைக்கு அறிக்கையாகப் பிரசுரிக்கப்படும்.

இராஜகோபுர நிர்மாண வேலைகள் பற்றி நிர்வாக சபைத் தலைவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமிழகம் சென்று சென்னை ஞானானந்த சமாஜத் தலைவர் ஸ்ரீஹரிதாஸ்கிரி அவர்களோடு ஆலோசனை நடத்தினர். அதன் பயனாக குருஜி அவர்களே தமிழக வளவனூர் ஸ்தபதி திரு. S. தேவலிங்கம் அவர்களிடம் இராஜ கோபுரத் திருப்பணி நிர்மாணப் பொறுப்பைக் கொடுப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொண்டு உதவினர். அத்துடன் துவார கணபதி, துவார பாலசுப்பிரமணியர், சங்கநிதி, பதுமநிதி ஆகிய நான்கு சிலைகளையும் குருஜி அவர்களே தமது சமாஜப் பணத்தில் செய்து அன்பளிப்புச் செய்தார். சுவாமியின் ஆசியினாலும் ஆதரவினாலும் ஈழத்திலும் பல ஞானானந்த சமாஜ அன்பர்கள் திருப்பணி நிதி உதவியுள்ளனர். மகாகும்பாபிஷேக தினத்திற்கென ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமி அவர்கள் வருகை தந்ததுடன் தம்முடன் தர்மபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், ஞானானந்த சமாஜம் ஆகியவற்றினால் உபசரிக்கப்பட்ட காசி, கங்கா போன்ற புண்ணிய தீர்த்தங்கள், கும்பாபிஷேகத் திரவியங்கள் முதலியவற்றைக் கொண்டுவந்து உதவியும், சமய சொற்பொழிவாற்றியும் சிவாச்சாரியார்களுக்கு விலைமதிப்பு மிகுந்த பொன்னாடைகள் வழங்கியும் உதவியதற்கு குருஜி அவர்களுக்கு எமது நிர்வாக சபையின் சார்பில் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

இராஜகோபுரத் திருப்பணி, உள் கோயில் திருப்பணிகள் தமிழக வளவனூர் ஸ்தபதி திரு. S. தேவலிங்கம் அவர்களால் மிகவும் போற்றத்தக்கமுறையில் நிறைவேற்றப்பட்டன. ஸ்தபதி திரு. S. தேவலிங்கம் அவர்களும் அவரின் மகன் திரு. தே. சிவசண்முகம் மற்றும் திருவாளர்கள் இராமு, இராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, இராஜன், பக்கிரிசாமி, இராசேந்திரன், பழனிவேல், சோதி இராமலிங்கம் ஆகியோரும் இருவருட கால மளவில் ஆலயத்தில் தங்கியிருந்து எல்லோரும் வியக்கும் வண்ணம் இராஜகோபுர அமைப்பு, உள்மண்டபங்கள் வர்ணம் தீட்டல், ஸ்தூபி பாவைகள் அமைப்பு முதலிய வேலைகளைப் பூரணப்படுத்தியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எமது நிர்வாகசபை உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றது. இராஜகோபுர வர்ணப்பூச்சு உள்ளூர் கலைஞர்களால் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் சித்திரக் கலைஞர் திரு. செ. சிவப்பிரகாசம் அவர்களின் மேற்பார்வையில் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. நா. கனகராசா அவர்களின் குழுவினரால் வர்ணங்கள் அழகாகத் தீட்டப்பட்டுள்ளன. அவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

இராஜகோபுர பெரும் வாசல் கதவுகள் மிகவும் அழகானதும் உறுதியானதுமாக நீர்வேலி ஸ்ரீ காமாட்சி அம்பாள் தொழிற்

சாலையினரால் செய்யப்பட்டது. அவர்களின் சிறந்தபணிக்கு எமது பாராட்டையும் நன்றியறிதலையும் தெரிவிக்கின்றோம். உள் கோயில் வாசல் இரும்புப் படலை வேலைப்பாடு அமைந்ததாகச் சிறந்த முறையில் செய்த சுன்னாகம் வேல்அழகன் இரும்புத்தொழிற் சாலை உரிமையாளர் அவர்களுக்கும் எமது நன்றி.

ஆலய உள்மண்டபங்கள், சுற்றுப்பிரகார கோவில்கள் ஆகியவற்றுக்குப் பளிங்குக் கற்கள் பதிக்கும் வேலையைத் தொல்புரம் ஸ்ரீ கிஷ்ருணனந்தன் கொங்கிறீற் வேக்ஸ் ஸ்தாபனத்தார் மிகவும் குறுகிய காலத்தில் செய்துள்ளனர். அவர்களுக்கு எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். இராஜகோபுரத்தில் பொருத்துவதற்கென ஒன்பது கலசங்கள், மின்சார பெரிய மணிக்கூடு, மின் வெளிச்சங்கள் முதலியன அன்பர்களால் வழங்கப்பட்டன. மற்றும் உள்மண்டப நிலவேலை, பளிங்குவேலை ஆகிய வற்றிற்கும் தனிப்பட்ட உபயமாக நிறை வேற்ற நிதியுதவியுள்ளார்கள். அவைபற்றிய விபரங்கள் யாவும் ஆண்டறிக்கையில் இடம் பெறும் என அறியத்தருவதுடன் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மகாகும்பாபிஷேகம் பொது உபயமாகச் சிறப்பாக நடைபெற்றது. அதற்கென ஏறக் குறைய இரண்டேகால் இலட்சம் ரூபா அளவில் அம்பாள் அடியார்களால் ஈழத்தில் பல பாகங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந் தும் விருப்புடன் வழங்கப்பட்டதை நாம் நன்றியறிதலுடன் அறியத்தருகின்றோம். அத்துடன் மகாகும்பாபிஷேகத்திற்கு வேண்டிய பொருட்கள் பெருமளவில் பக்தர்களால் வழங்கப்பட்டன. அவர்கள் அனைவருக்கும் அம்பாள் கருணை கிடைக்கப் பிரார்த்திக் கின்றோம்.

மகாகும்பாபிஷேகக் கிரியைகளைச் சிவாகம முறைப்படி சிறப்பாக இயற்றிய பிரதான சிவாச்சாரியர்களான மாவை ஆதீன கர்த்தா சிவஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள், மாவை ஆதீனம் சிவஸ்ரீ கு. பஞ்சநாதக் குருக்கள், வண்ணை வெங்கடேஸ்வரதேவஸ்தான பிரதம குரு, பிரதிஸ்டா குரு, சிவஸ்ரீ சாமி விஸ்வ நாதக் குருக்கள், நீர்வேலி சிவஸ்ரீ ஆ. சந்திர சேகரக் குருக்கள், கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வர பிரதமகுரு சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள், திருக்கேதீஸ்வர பிரதமகுரு சிவஸ்ரீ ச. சுப்பிரமணியப் பட்டர், உசன் கந்தசாமி கோவில் சிவஸ்ரீ க. சுந்தரேஸ்வரக் குருக்கள், நீர்வேலி சிவஸ்ரீ ஆ. சோமசுந்தரக் குருக்கள் ஆகியோருடன் ஏனைய பிராமணோத்தமர்களுக்கும் எமது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவிக் கின்றோம்.

மகாகும்பாபிஷேக தினத்தன்று வேத அத்தியயனம், திருமுறை பாராயணம் செய்த தமிழக, உள்ளூர் இசைச் செல்வர் களுக்கு எமது நன்றி. மகாகும்பாபிஷேகத் தைத் தொடர்ந்து நாற்பத்தைந்து நாட்கள் மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற அம்பாள் பக்தர்கள் திருவிழா உபயம், அபிஷேக உபயம் ஆகியவற்றைத் தமது சொந்தச் செலவில் பொறுப்பேற்று நடாத்தி எமக்கு ஒத்துழைப்பு நல்கினர். அப் பெரு மக்கள் யாவருக்கும் எமது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அவர்களுக்கு அம்பாள் கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக் கின்றோம்.

மகாகும்பாபிஷேகத்திற்கும் பின் நடை பெற்ற சென்னை சைவசித்தாந்த சமாஜ மாநாட்டிற்கும் தமிழகத்திலிருந்தும் வெளி யூர்களிலிருந்தும் வருகை தந்த பக்தர்கள் தங்குவதற்குத் தமது புதியவீடுகளைக் கொடுத் துதவியதுடன் வசதிகள் பல செய்து உதவிய தெல்லிப்பழை திரு. வி. இரத்தினம் (கட்டிட ஒப்பந்தகாரர்), திரு. S. சாந்தராசா (இலங்கை வங்கி முகாமையாளர்) ஆகியோ ருக்கும், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்திய சாலையினருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

மகாகும்பாபிஷேக நாட்களிலும் அதற்கு முந்திய தினங்களிலும் தண்ணீர்ப் பந்தல் கள் அமைத்து ஆலயத்திற்கு வருகை தந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்குத் தாக சாந்தி அளித்த தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசத்தினருக்கும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின ருக்கும் எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இவ்விசேட வைபவத்திற்கென நீர்த் தாங்கி வாகனம், மற்றும் உதவிகளை வழங்கிய யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு எமது மனமார்ந்த நன்றி.

மகாகும்பாபிஷேக நாட்களில் ஆலய சேவைக்கு எமது வேண்டுகோளை ஏற்றுப் பல பாடசாலைகளைச் சேர்ந்த சாரணர்கள் வருகை தந்தனர். அச்சாரணச் சிறுர்களின் அளப் பரிய சேவைக்கும் அவர்களுக்குப், பொறுப் பாகவிருந்த யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சாரணர் இயக்க ஆணையாளர்கள், ஆசிரி யர்களுக்கும் அப்பாடசாலை அதிபர்களுக்கும்

எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். மேலும் பெரும்தொகைப் பக்தர்கள் நடமாட்டத்தை முன்னிட்டு அவர்களின் பாதுகாப்புக் கருதி ஒழுங்குகள் மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவர்களுக்கும் சேவையில் ஈடுபட்ட காவற்படையினருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மின்சார விநியோகம் சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து உதவிய தெல்லிப்பழைக் கிராமசபை மின்சார அத்தியட்சர் திரு. கண்ணபிரான் அவர்களுக்கும் மின்சாரப் பகுதி ஊழியர்களுக்கும் அவர்களின் பணிகளுக்கும் எமது நன்றி. மகாகும்பாபிஷேக நிகழ்ச்சிகளைச் சிறப்பாக ஒலிப்பதிவு செய்த வானொலிப் பகுதிக்கு எமது மனமார்ந்த நன்றி. பக்தர்களின் பிரயாண வசதி கருதி விசேட போக்குவரத்துச் சேவையை ஒழுங்கு செய்து உதவிய வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர்கள், ஊழியர் அனைவருக்கும் எமது நன்றி. தொலைக்காட்சி படம்பிடிப்புச் சேவையைச் சிறப்பாக ஆற்றிய V.K. இராசரத்தினம் ஸ்தாபனத்திற்கு எமது நன்றி.

மகாகும்பாபிஷேகம் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டு நிகழ்ச்சிகளையும், கட்டுரைகளையும், புகைப் படங்களையும் காலத்துக்குக் காலம் பிரசுரித்து துர்க்கை அம்பாள் தேவஸ்தானத்தின் பணிகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பு நல்கிய ஈழத்துத் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகளுக்கு எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தர்மகர்த்தாசபை ஆலய திருப்பணிகள், மகா கும்பாபிஷேகம், சைவசித்தாந்த மாநாடு ஆகியவை செவ்வனே நடைபெற ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கியமைக்கு அதன் தலைவர் திரு.வி. தர்மலிங்கம், பா. உ. அவர்களுக்கும் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்க உறுப்பினர்கள் மகாகும்பாபிஷேக ஒழுங்குகளை மேற்கொள்ள உறுதுணையாக இரவு பகல் என்று பாராது அயராது பல மாத காலங்களுக்குச் சிரமதானப்பணியாற்றினர். மேலும் சைவசித்தாந்த மாநாடு காலங்களிலும் தமிழக அறிஞர்களை உபசரிப்பதிலும் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்வதற்கும் நிர்வாகசபை உத்தியோகத்தர்களுடன் தோளோடு தோள்நின்று பெரும் பணியாற்றினர். அவர்களுக்கு நிர்வாகசபையின் பாராட்டுக்களையும் நன்றியறிதலையும் தெரிவிக்கின்றோம்.

மாதர் தொண்டர் சபை உறுப்பினர்கள் சிறந்த சரியைத் தொண்டாற்றினர். கும்பாபிஷேகப் பொருட்களைச் சேகரித்தல், பாத்திரங்கள் விளக்குதல், அன்னதான தாகசாந்தி முதலியவற்றிற்கு உதவுதல் போன்ற பணிகளை எல்லோரும் போற்றும்வண்ணம் செய்தமைக்கு நிர்வாகசபையின் மனமார்ந்த நன்றி உரித்தாகுக. நிர்வாகசபை உத்தியோகத்தர்களுக்கு உதவியாக விசேட அழைப்பின் பேரில் பல அன்பர்கள் இந் நாட்களில் பெருந் தொண்டாற்றியமைக்கு எமது நன்றி. ஆலய ஊழியர்கள் யாவர்க்கும் அவர்களின் இடையறுப் பணிக்கு நன்றி செலுத்துகின்றோம்.

மண்டலாபிஷேகப் பூர்த்தி நாளான இன்று அம்பாள் திருவடியை அன்போடு தொழும் அடியார் கையில் உளம் பூரிக்கும் திருவருட் பிரசாதமாகத் திகழும் இம் மலருக்கு ஆசியுரை வழங்கியும் தம் சிரமங்களையும் பாராது கட்டுரைகள் எழுதி அனுப்பியும் எமக்கு ஒத்துழைப்பு அளித்த பெருமக்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இம்மலருக்கு வேண்டிய புகைப் படங்களை எடுத்துதவிய பத்திரிகை நிருபர்கள், ஸ்ருடியோ உரிமையாளர்களுக்கும் முகப்புப் படத்தை குறுகிய காலத்தில் புளொக்காக்கி உதவிய யாழ்ப்பாணம், கொழும்பு ஸ்ருடியோ ஸ்தாபனத்தாருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இப்பெரும் முயற்சியை மிகவும் குறுகிய காலத்தில் சிறப்புற அச்சேற்றித் தந்த சுன்னாகம் திருமகள் அழுத்தக அதிபருக்கும் அங்கு பணியாற்றும் அன்பர்களுக்கும் எமது உளம் கனிந்த நன்றி.

துர்க்கை திருவடி போற்றி.

சு. சிவவாகீசர்
கா. தணிகாசலம்
இணைக்காரியதரிசிகள்
ஷை தேவஸ்தான நிர்வாகசபை

# துர்மதி வருட விசேட உற்சவங்கள்

| | | | |
|---|---|---|---|
| 13- 4-81 | திங்கள் | : | புதுவருடப்பிறப்பு விழா |
| 17- 4-81 | வெள்ளி | : | மகா கும்பாபிஷேக விழா |
| 18- 4-81 | சனி | : | சித்திராப் பூரணை விழா |
| 18- 5-81 | திங்கள் | : | வைகாசிப் பூரணை விழா |
| 31- 5-81 | ஞாயிறு | : | மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவும் நவரோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும் |
| 5- 6-81 | வெள்ளி | : | பெரிய புராண பூர்த்தி விழா |
| 17- 6-81 | புதன் | : | ஆனிப் பூரணை விழா |
| 5- 7-81 | ஞாயிறு | : | திருவாசக விழா |
| 16- 7-81 | வியாழன் | : | ஆடிப் பூரணை விழா |
| 3- 8-81 | திங்கள் | : | ஆடிப் பூர விழா |
| 11- 8-81 | செவ்வாய் | : | ஆடிக் கடைசிச் செவ்வாய் |
| 31- 8-81 | திங்கள் | : | கொடியேற்றம் |
| 10- 9-81 | வியாழன் | : | தேர் |
| 11- 9-81 | வெள்ளி | : | தீர்த்தம் |
| 13- 9-81 | ஞாயிறு | : | ஆவணிப் பூரணை |
| 28- 9-81 | திங்கள் | : | நவராத்திரி விரதம் |
| 8-10-81 | வியாழன் | : | விஜயதசமி |
| 13-10-81 | செவ்வாய் | : | புரட்டாதிப் பூரணை |
| 27-10-81 | செவ்வாய் | : | கேதார கௌரி விரதம் |
| 2-11-81 | திங்கள் | : | கந்தசட்டி விரதம் |
| 11-11-81 | புதன் | : | ஐப்பசிப் பூரணை |
| 9-12-81 | புதன் | : | குமாராலய தீபம் |
| 10-12-81 | வியாழன் | : | திருவிளக்குப் பூசை, சர்வாலய தீபம் |
| 31-12-81 | வியாழன் | : | திருவெம்பாவை ஆரம்பம் |
| 1- 1-82 | வெள்ளி | : | பிள்ளையார் கதை |
| 8- 1-82 | வெள்ளி | : | ஆருத்திரா தரிசனம் |
| 9- 1-82 | சனி | : | மார்கழிப் பூரணை |
| 14- 1-82 | வியாழன் | : | தைப்பொங்கல் விழா |
| 7- 2-82 | ஞாயிறு | : | தைப் பூரணை |
| 22- 2-82 | திங்கள் | : | மகாசிவராத்திரி |
| 8- 3-82 | திங்கள் | : | மாசிமகம் |
| 9- 3-82 | செவ்வாய் | : | மாசிப் பூரணை |
| 8- 4-82 | வியாழன் | : | பங்குனிப் பூரணை |

உ

தேவிதுணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

**தர்மகர்த்தாசபை**

திரு. வி. தர்மலிங்கம், பா. உ.
,, சே. சிதம்பரவுடையார்
,, கு. பாலசிங்கம்
,, சு. சிவவாகீசர்
,, சி. விசுவநாதன்
,, இ. கனகசபை
,, அ. சிவபாதசுந்தரம்
,, நா. திருநாவுக்கரசு
,, க. ஜனநாயகம்
,, சி. சத்தியமூர்த்தி

துர்க்காதுரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
(நிர்வாகசபைத் தலைவர்)

திரு. க. தணிகாசலம் (நிர்வாகசபை
இணைச்செயலாளர்)

திரு. க. கணேசரத்தினம் (நிர்வாகசபைத்
தனாதிகாரி)

**நிர்வாகசபை**

துர்க்காதுரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி (தலைவர்)
திரு. நம. சிவப்பிரகாசம் (உபதலைவர்)
திரு. த. பொன்னம்பலம் (உபதலைவர்)
திரு. சு. சிவவாகீசர் (இணைச்செயலாளர்)
திரு. க. தணிகாசலம் (இணைச் செயலாளர்)
திரு. க. கணேசரத்தினம் (தனாதிகாரி)
திரு. அ. சண்முகநாதன் (உப தனாதிகாரி)
திரு. பொ. செல்லப்பா
,, சி. விசுவநாதன்
,, ச. ஆறுமுகநாதன்
,, வே. சின்னத்துரை
,, ந. செல்வநாயகம்
,, இ. முருகையா
,, நா. திருநாவுக்கரசு
,, இ. இலட்சுமிநாதன்
,, மு. அருளையா
,, நா. தவநாதன்
திருமதி சி. பொன்னுத்துரை

**கோவிற் பிரதமகுரு :** சிவஸ்ரீ க. சுந்தரேஸ்வரக் குருக்கள்

**அர்ச்சகர்கள் :** ஸ்ரீ ப. நீலகண்டஐயர்
ஸ்ரீ சா. புவனேஸ்வரசர்மா
ஸ்ரீ கு. கௌரிபாலன்
ஸ்ரீ வ. தட்சணஐயர்

**கணக்கப்பிள்ளைகள் :** திரு. பே. சிவபாதம்
திரு. கா. சிவபாலன்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

திருமகள் அழுத்தகம், சுன்னுகம்—3990/5-81